www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை

# புதிய பூமி

පුදිය පූමි

Puthiya Poomi

சுற்று 13 டிசம்பர் 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 98

# யுத்தப் பேரழிவுக்குள் நாடு மூழ்கப் போகிறது!


## தடுத்து நிறுத்துவது யார் ?

கடந்த நான்கரை ஆண்டுகளுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டு வந்த புரிந்துணர்வு யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் கீழான சமாதானப் பேச்சு வார்த்தைகள் யாவும் தோல்வியிலேயே முடிந்துள்ளன. யதார்த்தவாதி என்றும் நாட்டினதும் மக்களினதும் சாதாரண நிலை உணர்வுகளைப் புரிந்து கொண்டவர் என்றும் கூறப்பட்ட மகிந்த ராஜபக்ஷ பதவியேற்று ஒருவருடம் முடிவடைந்த நிலையில் சமாதான முயற்சிகள் சாதகமான பாதையில் முன்செல்லவில்லை. குறிப்பாக ஜெனிவாப் பேச்சுவார்த்தைகள் இரண்டும் தோல்வியிலேயே முடிந்தன. பேரினவாத யுத்த வாதிகளால் வழி நடத்தப்படும் ஒருவராகவும் துட்டகெமுனுவிற்கு அடுத்தவர் என்ற நிலைப்பாட்டை முன்னெடுப்பவராகவுமே ஜனாதிபதி மகிந்த காணப்படுகிறார்.



இந்நிலையிலேயே தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தனது அண்மைய மாவீரர் தின உரையில் "தனியான தமிழீழ அரசை நிறுவுவதற்கு தீர்க்கமான முடிவை எடுத்திருக்கின்றோம்" என்னும் இறுதிக் கட்ட முடிவை தெரிவித்திருக்கிறார். தான் இத்தகைய முடிவுக்கு வருவதற்கான காரணங்களையும் அவர் தனது உரையில் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஜனாதிபதி மகிந்த கடைப்பிடித்துவரும் நிலைப்பாடும் புலிகள் இயக்கத் தலைவர் வே. பிரபாகரன் எடுத்துள்ள முடிவும் கொடூர யுத்தம் ஒன்று மூழுவதற்கான சூழலைத் தோற்றுவித்துள்ளது. அவ்வாறான யுத்தமானது வடக்கு கிழக்கை மேலும் நாசப்படுத்தவும் முழுநாடும் பேரழிவுகளுக்குள் சிக்கவும் கூடிய அபாயத்தைத் தோற்றுவித்துள்ளது. இத்தகைய நிலை சமாதானத்தையும் இயல்பு வாழ்வையும் எதிர்பார்த்திருக்கும் வடக்கு கிழக்கு மக்களுக்கும் யுத்தத்தை எதிர்த்து வரும் தென்னிலங்கை மக்களுக்கும் ஏமாற்றத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்தி உள்ளது. அதேவேளை இலங்கையை மறுகொலனியாக்கம் செய்து வரும் சர்வதேச சமூகம் எனப்படும் ஏகாதிபத்திய வாதிகளுக்கும் இந்திய பிராந்திய மேலாதிக்க சக்திகளுக்கும் யுத்தம் மூழ்வது மேலும் பல வாய்ப்புகளை திறந்து விடவே செய்யும். ஆதலால் அவர்களிடம் தமிழ் மக்களோ அல்லது சமாதானத்தை விரும்பும் சிங்கள மக்களோ எதையும் எதிர்பார்க்க முடியாது.



தனது மகிந்த சிந்தனையில் ஒற்றையாட்சியின் கீழான மட்டுப்படுத்தப்பட்ட பரவலாக்கம் பற்றியே குறிப்பிட்டு வருபவர் மகிந்த ராஜபக்ஷ. அதிலிருந்து அவர் வழிதவறிவிடக் கூடாது என்பதில் ஜே. வி. பியும் ஜாதிக ஹெலஉறுமய வும் மகிந்தவக்கு அரவணைப்புடன் ஆலோசனை வழங்கி வருகின்றன. அவற்றை ஏற்றுக்கொள்வதிலும் ராணுவத்தீர்வு நோக்கிய பாதையில் வழிநடப்பதிலும் ஜனாதிபதி உறுதியாக இருக்கிறார் என்பதையே அண்மைக் கால நடைமுறைகள் உறுதிப்படுத்தியுள்ளன.

வடக்கு கிழக்கைப் பாரம்பரிய பிரதேசங்களாகக் கொண்ட தமிழ்த் தேசிய இனத்தின் கோரிக்கைகள் பேரினவாத ஒடுக்கு முறையின் விளைவாக உருவாகியவை. அவற்றுக்கு நியாயமான தீர்வுகள் வழங்கப்படுவது மறுக்கப்பட்டு வந்த சூழலிலேயே ஆயுதப் போராட்ட நிலை உருவாகியது. அப்பொழுது கூட பேரினவாத ஆளும் வர்க்கம் தூர நோக்குடன் அரசியல் தீர்வு காண முன்வரவில்லை.

தொடர்ச்சி 12ம் பக்கம் →

## தோட்டத் தொழிலாளர்கள் "மெதுவான வேலை" என்ற ஏமாற்றை நம்பாது

# முழுமையான போராட்டத்திற்கு தயாராக வேண்டும்.

பெரும் தோட்டத் கம்பனிகள் தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டிய சம்பள உயர்வு விடயத்தில் தமது வழமையான மறுப்பைத் தெரிவித்து வருகின்றன. கடந்த இரண்டு வருடங்களில் கோடி கோடியாக லாபம் பெற்ற மேற்படி கம்பனிகள் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு விடயத்தில் தமது முதலாளித்துவ சுரண்டல் பிடியை விட்டுக் கொடுப்பதாக இல்லை. இத்தகைய கொள்ளை லாபக் கம்பனிகளுக்கு தொழிலாளர்கள் ஒன்று திரண்டு சரியான பாடத்தைப் புகட்டவேண்டும். ஆனால் அதற்கு முதுகெலும்பற்ற தொழிற் சங்கத் தலைமைகள் தயாராக இல்லை. இரவிலே கம்பனிகளிடம் சோரம் போகும் ஆதிக்க தொழிற் சங்கத் தலைமைகளால் பகலிலே தொழிலாளர்களை ஏமாற்ற முடியுமே தவிர நேர்மையாகப் போராட்டத் தலைமை கொடுக்க பின் நிற்கின்றன. அவ்வாறே கொழும்பில் அரசாங்கத்தில் அமைச்சர் பதவிகளையும் இன்னும் பிற சலுகைகள் சுகபோகங்களை ஐந்து நட்சத்திரக் ஹோட்டல்கள் வரை அனுபவிப்பவர்களால் அரசாங்கத்தை நிர்ப்பந்திக்க முடியாது உள்ளனர்.




அதனாலேயே "மெதுவான வேலை" என்ற ஒன்றைச் செய்யுமாறு தொழிலாளர்களை ஏமாற்ற முற்பட்டுள்ளனர். தொழிலாளர்களின் சம்பள உயர்வை மறுக்கும் கம்பனிகளையும் அதன் முதலாளிகளையும் அவசர காலச் சட்டத்தினால் எதுவும் செய்ய முடியாது. ஆனால் சம்பள உயர் கேட்டு வேலை நிறுத்தம் செய்தால் அவசரகாலச் சட்டத்தின் கீழ் அல்லது நீதி மன்றத் தீர்ப்பின் கீழ் தொழிலாளர்களைத் தண்டிக்கலாம். இது தான் முதலாளித்துவ ஜனநாயகமும் நீதியுமாகும்.

இவற்றுக்கும் அப்பால் மலையகத் தொழிலாளி வர்க்கம் "கோடிக்கால் பூதமடா தொழிலாளி அவன் கோபத்தின் ரூபமடா" என எழுந்து போராடத் தம்மை தயார்படுத்த வேண்டும். அதற்கு ஆதிக்கப் பிடியின் கீழ் உள்ள தொழிற்சங்கத் தலைமைகளை நிராகரித்து நேர்மையான போராட்டத்தலைமை கொடுக்கக் கூடிய தொழிற்சங்கத்தில் அணி திரள வேண்டும். அதன் அடிப்படையிலேயே பாட்டாளி வர்க்க புதிய ஜனநாயக தொழிற் சங்கம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. "மெதுவான வேலை" என்பதற்குப் பதிலாக நியாயமான சம்பள உயர்வைப் பெறுவதற்கான திட்ட அடிப்படையில் ஐக்கியப்பட்ட போராட்டங்களை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரி மேற்படி சங்கம் அறைகூவல் விடுத்துள்ளது. அதற்கான தொழிலாளர் மாநாடு 04-12-2006 அன்று அட்டன் நகரில் கூட்டப்பட்டுள்ளது. இன்றைய நிலையில் மலையகத் தொழிலாளி வர்க்கம் ஏமாற்றும் தலைமைகளை மீண்டும் நம்பி ஏமாந்து கொள்வதை விடுத்து அவர்களது தலைகளுக்கு மேலாக சம்பள உயர்வுக்குப் போராட முன்வரல் வேண்டும். இல்லையேல் பிச்சையாகப் போடப்படும் ஒரு சில ரூபாய்களை வாங்கிக் கொண்டு அடிமைகள் போன்று கடந்த காலங்கள் போன்று உழைத்து உழைத்து உழல வேண்டியது தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net　　நன்றி - நூலகத்திட்டம்



# நாலு நடக்கும் உலக'லே

நற்குணன்

## பட்டினிச் சாவும் பார்வையார்களும்

யாழ்ப்பாணத்தின் முதற் பட்டினிச்சாவு பற்றிய கொழும்பு ஊடகக் கருத்துகளில் அதன் முக்கியத்துவத்தை மறுக்கும் விதமான அரசாங்க எடுபிடிகளின் மறுப்புப் பிரசாரங்கள் ஒரு புறமும் அதை அரசாங்க விரோதப் பிரசாரமாகப் பயன்படுத்தும் வாய்ப்புப் பற்றிய மகிழ்ச்சியுமே அதிகம் தெரிகின்றன. ஆயினும் மனிதரை முற்றிலும் அநாதரவான நிலைக்குத் தள்ளியுள்ள சூழல் முடிவுக்கு வராமல் இவ்வாறான அவச் சாவுகள் தவிர்க்க முடியாதன. ஒன்றை உறுதியாகச் சொல்லலாம். யாழ்ப்பாண மக்களின் இன்றைய அவலம் திட்டமிட்டே உருவாக்கப்பட்டது. அதேயளவுக்கு உறுதியாக இன்னொன்றைச் சொல்லலாம். அது பற்றி முதலைக் கண்ணீர் வடிக்கிற சர்வதே சமூகம் எதையும் செய்யப் போவதில்லை.

## இப்படியும் ஒரு நற்சான்று

படுகொலைக்காளான ரவிராஜ் பயங்கரவாதிகளுடன் தொடர்பு இல்லை என்று சுரேஷ் பிரேமச்சந்திரன் நற்சான்று வழங்க முயன்றதன் மூலம் விடுதலைப்புலிகள் பயங்கரவாதிகள் என்று மறைமுகமாகச் சொல்லியிருக்கிறாரா என்ற கேள்வி என் மனதில் எழுந்தது. ரவிராஜின் அரசியலுடன் நான் மிகவும் வேறுபட்டாலும் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று நேரடியாகவோ மறை முகமாகவோ குற்றஞ்சாட்டுவதை அவர் ஏற்றவரல்ல.

எனவே யாரை மகிழ்விப்பதற்காக சுரேஷ் பிரேமச்சந்திரன் பயங்கரவாதம் பற்றிப் பேசியிருக்கிறார்?

## புதிய பேய் பூதங்கள்

ரவிராஜ் ஐக்கிய இலங்கையை விரும்பியவர், சமாதான வழியில் தீர்வை வேண்டியவர், பயங்கங்கரவாதத்தை எதிர்த்தவர். எனவே அவரை விடுதலைப் புலிகளே கொன்றிருக்கலாம் என்ற தொனிப்பட அமைச்சர் கெஹெலிய ரம்புக்வல்ல பேசியிருக்கிறார். அவர் சொல்வதை யாருமே கணக்கில் எடுப்பதில்லை என்ற தைரியம் அவருக்கு இருக்கலாம்.

டெய்லி மிரரும் அதே விதமான தொனியில் ஆனால் வேறு தமிழ்ப் பயங்கரவாத இயக்கங்களுக்கும் அதிற் பங்கிருக்கலாம் என்ற தொனியில் 11-11-2006 அன்று தலையங்கம் தீட்டியிருந்தது. இவர்கள் எல்லாரும் கவனிக்க மறுப்பது எதையென்றால் இந்தக் கொலையை யார் செய்தார்கள் என்பதை விட முக்கியமானது யாருடைய தூண்டுதலாலும் யாருடைய தேவையாலும் இக் கொலை நடந்தது என்ற விடயமேயாகும்.

குமார் பொன்னம்பலம் கொலை பற்றிய கேள்விகள் இன்னொரு முறை ரவிராஜ் தொடர்பாக எழுந்துள்ளன. அரசாங்கமே விரும்பினாலும் அரசியல் கொலைகளைத் தடுத்து நிறுத்த இயலாத ஒரு பயங்கரவாதத் சூழலுக்குள் இந்த நாடு மூழ்கத் தொடங்கிவிட்டது.

சில வகையான பேய் பூதங்களை உசுப்பி விடுவது சுலபம். பின்பு கட்டுப்படுத்துவது என்பது இயலாதது. தூண்டி விட்ட மந்திரவாதியையே பலி எடுக்கக் கூடியவை அவை என்று கூறப்படுவது இவ் விடயத்தில் பொருந்துவதாகவே உள்ளது.

## புதிய பூமி 2007ம் ஆண்டு சந்தா

| | |
|---|---|
| தனிப்பிரதி | ரூபா 15.00 |

**உள்நாடு**

| | |
|---|---|
| ஒரு வருடம | ரூபா 250.00 |
| ஆறு மாதங்கள் | ரூபா 125.00 |

(தபால் செலவு உட்பட)

**வெளிநாடுகளுக்கு**

ஒருவருடம்- 20 அ. டொலர்கள்

அனுப்பவேண்டிய முகவரி

காசுக் கட்டளை
(கிராண்பாஸ் தபாலகத்திற்கு)
நிர்வாகி
புதிய பூமி
47,3வது மாடி
கொ. ம. ச. தொகுதி
கொழும்பு-11.

வங்கி
S. Therverajah
A/C No:- 452868
Bank Of Ceylon
Super Market
Colombo-11
Sri Lanka.

# மலையகத்தில் பரப்பப்படும் நுகர்வுப் பண்பாட்டு நோய்!

பொருட்களின் நுகர்வு அன்றாட வாழ்வுக்கும் தேவைக்கும் உரிய அத்தியாவசியமாக இருந்து வந்த நிலைமை இன்று தலைகீழாக மாற்றப்பட்டுள்ளது. நுகர்வு நுகர்வுக்காக என்ற விதமான ஒரு வகை நோயாகி உள்ளது. இந்த நுகர்வுப் பண்பாட்டை திறந்த பொருளாதாரக் கொள்கையும் உலகமயமாதலும் மக்களிடையே திணித்து வருகின்றதைக் காண்கிறோம்.

இவ்வாறான நுகர்வுக்கு அடிமையாகும் போக்கு நாடெங்கும் பரவிவரும் சூழலில் மலையகமும் அதிலிருந்து தவறவில்லை. பின்தங்கிய சமூகச் சூழலில்தான் மலையகத்தமிழ்த் தேசிய இனம் இருந்து வருகின்றது. ஆகக் குறைந்த நாட்சம்பளம் பெறுபவர்களாக தோட்ட தொழிலாளர்கள் இருந்து வருகிறார்கள். சொந்த நிலமோ அடிப்படைத் தேவைகளுடன் கூடிய வீடுகளோ இல்லை. பெருபான்மையான மலையக மக்களின் வாழ்க்கை நிலை இவ்வாறே நீடித்து வருகின்றது. அரசாங்கத்துறையினர் என்போர் ஆசிரியர் என்பதற்கு அப்பால் இலைமறை காயாகவே உள்ளனர். அத்தகைய உயர் அதிகாரிகள் என்போர் மலையக நகரங்களிலும் வெளிமாகாணங்களிலும் தம்மை நிலைப்படுத்தி தம்மை தனியொரு பகுதியாக்கி மேன்நிலையாக்கம் என்ற ஏணிப்படியில் ஏறி வருகின்றனர். ஆனால் ஆசிரியர்கள் மற்றும் கல்வித்துறையில் உள்ளவர்கள் பெரும் பான்மையோர் மலையகத்தில் அதுவும் தமது பிறந்து வளர்ந்த லயன் இருப்பிடங்களிலே தான் வாழந்து வருகின்றனர். வருவாய்க்கு தக்கவாறு தமது இருப்பிடங் களை ஓரளவிற்கு விரிபடுத்தியும் அழகுபடுத்தியும் வைத்திருக்கின்றனர். சிலர் தனியார் காணிகளை விலைக்கு வாங்கி தனி வீடுகளையும் கட்டி வருகின்றனர். அடிப்படைத் தேவைகளான உணவு உடை இருப்பிடம் என்பவற்றில் மாற்றங்கள் முன்னேற்றங்கள் கொண்டு வருவது எவ்வகையிலும் தவறாகாது. ஆனால் அதனைச் செய்வதாக நினைத்து நுகர்வின் மூலமான ஆடம்பரமான பொருட்களை கொள்வனவு செய்து அவற்றைத் தமது சிறிய வீடு முழுவதும் பரப்பி வைத்து அதனை ஒரு சமூக அந்தஸ்தாக மயங்கும் போக்கு மலையகத்தில் அதிகரித்து வருவதை அண்மைய கால ங்களில் காணமுடிகின்றது.

இவ்வாறான பொருட்களின் நுகர்வுக்கு மாதாந்த கடன் கழிவு முறையில் வர்த்தக நிறுவனங்கள் பொருட்களை வழங்குகின்றன. ஒரு ஆசிரியர் சராசரி பத்தாயிரம் முதல் பதினாறாயிரம் வரை சம்பளமாகப் பெறகின்றார். அத்தகைய ஒருவர் நுகர்வுப் பொருட்களின் கடன் கழிவுக்காக சம்பளத்தின் 75 வீதத்தை மாதாந்தம் இழக்கின்றார். இதனால் தமது குடும்ப அடிப்படைத் தேவைகளுக்கு அல்லறப்பட்டு கடன்மாறுகிறார். வட்டிக்கு பணம் பெறுகிறார். கடனாளியாகி கவலையடைந்து கவலையை மறக்க குடிபோதைக்கும் அடிமையாகிய ஆசிரியர்கள் பலரை மலையகத்தில் காண முடிகிறது. மாதா ந்த கடன் அடைக்க முடியாது வாங்கிய பொரு ட்களை வர்த்தக நிறுவனங்கள் மீளப் பெற்றுத் தூக்கிச் சென்ற சம்பவங்களும் இடம் பெற்றதும் உண்டு.

மேலும் இத்தகைய ஆரிசியர்களான அரசாங்க ஊழியர்கள் தமக்கும் தம்மவர்களுக்கும் ஆடம்பரத் திருமணங்களை தொலைக்காட்சித் தொடர்களில் வருவன போன்று நடாத்தி வாழ்நாள் கடனாளியாகி நின்று தவித்து வருகிறார்கள். இவர்கள் இவ்வாறு நடந்து கொள்வதற்கான அடிப்படையாக நிலவுடைமை- முதலாளித்துவ கருத்தியலே அமைந்து நிற்கின்றது. பழைமை , வழமை, சடங்கு சம்பிரதாயங்கள் என்பனவற்றால் மூளை நிரப்பப்பட்ட சூழலில் இவை தொடர்ந்து இடம் பெறவே செய்கின்றன.

மலையக மக்களின் சமூக அடிமைத்தனம் பற்றிய புதிய சிந்தனை இன்றி செயல்படும் சூழலை நுகர்வுப் பண்பாட்டு நோயானது ஊக்குவித்து வருகின்றது. இந்த நுகர்வுப் பண்பாட்டு நோயைத் திணித்துப் பரப்பி வரும் முதலாளித்துவ ஏகாதிபத்திய சக்திகள் தான் மலையகத் தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பைச் சுரண்டிக் கொள்ளையிட்டு செல்பவர்கள். அத்தகையோரின் புதியவகைச் சுரண்டலே நுகர்வுப் பண்பாட்டுத் திணிப்பாகும். இதற்கு எதிராக மலையக மக்கள் குறி ப்பாக ஆசிரியர்கள். கல்வி கற்றோர் விழிப்புடனும் தூர நோக்குடனும் இருந்து சமூக சிந்தனையை மக்களுக்கு ஊட்டுவ தும் அரசியல் விழிப்புற வைப்பதும் அவசியம்.

# வடக்கு கிழக்கில் நீடிக்கும் அவலங்கள் மனிதாபிமான வேண்டுகோள்கள் புறக்கணிப்பு

கடந்த நான்கு மாதங்களில் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வு அனைத்து தளங்களிலும் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டு வந்துள்ளது. ராணுவ நடவடிக்கைகள் ஒரு ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசத்தில் இடம் பெறும் அம்சங்கள் அத்தனையையும் கொண்டுள்ளன. இஸ்ரேலியப் பாணியிலான தாக்குதல்கள் தரை கடல் வான்வெளி என்பனவற்றால் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேவேளை குடா நாட்டிற்கும் கிழக்கே வாகரைக்கும் அத்தியாவசிய உணவுப் பொருட்களை கிடைக்கச் செய்வதில் அரசாங்கம் திட்டமிட்ட இறுக்க நடைமுறைகளை செயல்படுத்தி வருகிறது. இதன் மூலம் பட்டினி போட்டு மக்களைப் பணியவைக்கும் உபாயத்தை பௌத்த தர்மம் பேசும் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் கையாண்டு வருகின்றது. கடந்த இருபத்தைந்து வருட யுத்த சூழலுக்குள் ஒருபோதும் எழுந்திராத அளவுக்கு பொருட்களின் தட்டுப்பாடும் விலை அதிகரிப்புகளும் ஏற்பட்டுள்ளன. குறிப்பாக அன்றாட உழைத்து வாழும் மக்கள் முழுப் பட்னியும் ஏனையவர்கள் அரைப்பட்டினியுமாகவே உள்ளனர். இத்தனைக்கும் மத்தியில் கொலைகளும் ஆட்கடத்தல்களும் கொடூரமாக இடம் பெறுகின்றன. 1988-89 காலகட்டத்தில் தெற்கில் இடம் பெற்ற கொலைகள் காணாமல் போதல் பல ஆயிரக் கணக்கில் இடம் பெற்றமை போன்றே இன்று வடக்கு கிழக்கில் இடம்பெறுகின்றன. போட்டி போட்டு பழிக்குப்பழி என்ற நிலையில் திட்டமிட்ட பட்டியலிட்டு புலிகள் ராணுவத் தரப்பு களில் நாளாந்தம் கொலைகளும் ஆட்கடத்தல்களும் இடம் பெறுகின்றன.

இந் நிலையில் வடக்கு கிழக்கிலே ஜனநாயகத்திற்கும் மனித உரிமைக்கும் குரல் கொடுக்க பொது அமைப்புகள் முன்வரத்தயங்குகின்ற நிலையே கணப்படுகின்றது. காரணம் அங்கு ஜனநாயக சூழல் முற்றாக அற்றுப் போய் உள்ளமையேயாகும். மக்களின் துன்பதுயரங்களுக்கு குரல் கொடுக்க யாராவது முன்வந்தால் அத்தகையோருக்கு புலிப்பட்டம் கட்டி கொலை அச்சுறுத்தல் விடுக்கப்படும் அபாயச் சூழலே நிலவுகிறது. பத்திரிகை நிறுவனங்களுக்கு அச்சுறுத்தல் அடாவடித்தனங்கள் விடுக்கப்படுவது தொடர்கின்றன. ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதுடன் இன்றும் கொலை அச்சுறுத்தல் மத்தியில் பேனா பிடிக்க வேண்டியே உள்ளது. மேலும் குடாநாட்டில் ஜனநாயக கருத்துச் சுதந்திரம் அடக்கப்பட்டு வந்துள்ளமையை சுட்டிக் காட்டாது இருக்க முடியாது. ஏற்கனவே ஒற்றைக் கருத்தும் நடைமுறைகளும் திணிக்கப்பட்டு வந்ததன் விளைவாக மக்கள் மௌனமாக்கப்பட்டதன் எதிர் விளைவும் இன்றைய சூழலின் ஒரு பகுதியாக உள்ளது. கிறிஸ்தவ மத நிறுவனங்களின் உயர் தலைவர்கள் ஓரிருவர் மட்டுமே சில கோரிக்கைகளையும் வேண்டுகோள்களையும் விடுத்து வருகின்றனர். அத்துடன் தென்னிலங்கையில் இருந்து பாராளுமன்றத்திற்கு வெளியே உள்ள இடதுசாரி ஜனநாயக சக்திகளும் வடக்கு கிழக்கின் அவல நிலைக்கு எதிராகக் குரல் கொடுத்து வருகின்றன. அவர்களையும் அச்சுறுத்தும் வகையிலான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒட்டுமொத்தத்தில் ஜனநாயக மனித உரிமைகள் யாவற்றையும் காலில் போட்டு மிதித்து பேரினவாத ராணுவ மேலாதிக்க ஒடுக்கு முறை மேலோங்கி நிற்பதையே காண முடிகின்றது.

முன்பு தெற்கிலும் பின்பு வடக்கு கிழக்கிலும் ஓடிய இரத்த ஆறானது பல லட்சம் இளைஞர் யுவதிகளைக் கொன்றொழித்து விட்டது. இது இலங்கையின் ஆளும் வர்க்கத்திற்கும் அதன் வழிகாட்டியான ஏகாதிபத்தியத்திற்கும் தேவையானதாகும். அதன் மூலம் முதலாளித்துவம் தீர்க்க முடியாத பிரச்சினைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதுடன் புரட்சிகர சக்திகளாக வளரக் கூடிய இளந்தலை முறையை அழித்தொழிப்பதற்கும் இச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி வருகின்றது. என்ற உண்மை புரிந்து கொள்வது அவசியம்.

**வரதன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



## அமைச்சர் திஸ்ஸ விதாரண எந்த உலகில் வாழ்கிறார்

அமைச்சர் திஸ்ஸ விதாரண பழைய சிகப்புச் சாயம் கழன்ற சமசமாஜக்கட்சியைச் சேர்ந்தவர். பாராளுமன்றப் பதவி அமைச்சர் பதவி போன்றவற்றுக்காக அரசாங்கத்தில் இணைந்திருப்பவர். அதே போன்றவர் தான் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த குணசேகரா என்பவர். இவர்கள் இருவரும் வெளியிடும் கருத்துக்கள் உலகின் இடதுசாரிகள் கம்யூனிஸ்டுக்களையே தூக்கியடிக்கக் கூடியவைகளாகும். அந்தளவிற்கு பேரினவாதத்தையும் சிங்கள பௌத்தத்தையும் கைகோர்த்துப் பாதுகாத்து நிற்பவர்கள்.

அண்மையில் இந்தியாவிற்கு சென்ற அமைச்சர் திஸ்ஸ விதாரண இந்திய பஞ்சாயத்து ராஜ் முறை மூலம் கிராமங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யலாம் என்றும் இது இலங்கையின் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க உதவும் என்றும் பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார். இந்த விஞ்ஞான அமைச்சர் எந்த உலகத்தில் வாழ்கிறார்.

வட்டுக்கோட்டைக்கு வழி கேட்க துட்டுக்கு இரண்டு கொட்டைப்பாக்கு என்றாராம் செவிப்புலன் அற்ற கடைக்காரர். அதே போலத்தான் தமிழர் போராட்டம் தமிழீழம், சுயநிர்ணயம் உரிமை, சுயாட்சி, அதிகாரப் பகிர்வு என்றெல்லாம் முன்வைக்கப்படும் போது அமைச்சர் கிராமப் பஞ்சாயத்து முறை பற்றி பேசுகிறார். அவர் இலங்கையில் தான் இருந்தவரா அல்லது வேறெங்கோ இருந்து வந்து அமைச்சர் ஆனவரா என்றே கேட்கத் தோன்றுகிறது. ஆழமறியாது காலைவிடக் கூடாது. விஷயம் தெரியாது வாயைவிடக் கூடாது. முன்பும் தமிழகத்திற்கு அதே அமைச்சர் சென்ற வேளை புங்குடுதீவில் கொலை செய்யப்பட்டு கிணற்றில் போடப்பட்ட ஒரு இளம் பெண்ணைப் பற்றி நிருபர்கள் கேட்டபோது "அப்பெண் ஒரு விபச்சாரி" என்று வாய் கூசாது கூறினார். பின்பு இங்கு எதிர்ப்புக்கள் வந்ததும் தான் அப்படிக் கூறவில்லை என்று மறுப்பு அறிக்கை விட்டார்.


இப்போது இந்திய கிராம பஞ்சாயத்துப் பற்றி உழறுகின்றார். இந்த சாயம் கழன்ற இடதுசாரி அமைச்சர்களுக்கு சோஷலிச நாடுகளில் வெற்றிகரமாக நடை முறைப்படுத்தி வந்த சுயாட்சிகள், சுயாட்சி உள்ளமைப்புகள், மற்றும் மக்கள் அதிகார அலகுகள் பற்றிப் பேச வக்கில்லை. இந்தியாவின் நிலப்பிரபுத்துவ சாதிய வர்க்க அமைப்பின் எச்சமாக இருந்து வரும் கிராமப் பஞ்சாயத்தை யுத்தமாக்கப்பட்ட இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வாக முன்வைப்பதையிட்டு சிரிக்கவே முடிகிறது. ஆளும் வர்க்க பேரினவாதத்தின் பாதம் தாங்கிகளான இவ் இடதுசாரி அமைச்சர்கள் தமது பதவிகளுக்காக எதையும் பேசவல்லவர்கள் என்பதை நினைவில் வைத்திருந்தால் போதுமானதாகும்.

## இயல்பு வாழ்வு குலைக்கப்பட்ட குடாநாட்டு நிலைமைகள்

- நினைத்தபடி ஊரடங்கு உத்தரவைப் பிறப்பித்து நடைமுறைப்படுத்தல்.
- கருத்துச் சுதந்திரத்திற்குப் பாதிப்பு ஏற்படுத்தல்
- "வெள்ளை வான்" மூலமான கடத்தல் பற்றிய அச்சம்
- அடையாளம் தெரியாத ஆயுததாரிகளால் கொலைகள் செய்யப்படுதல்.
- கைதுகள், காணாமல் போதல்களின் அதிகரிப்பால் மக்களிடையே பயப்பீதி.
- வாங்க முடியாதளவிற்கு பொருட்களின் விலையேற்றம்
- வருமான இழப்பும் உழைப்பு முயற்சி வீழ்ச்சியும்
- உணவு விநியோகத்தில் ஒழுங்கீனமும் சீரற்ற நிலையும்
- சுமூகமான கல்விக்குரிய சூழல் மோசமடைந்துள்ளமை
- மனிதாபிமானம் மதிப்பிழந்து போயுள்ளமை.
- அத்தியாவசிய சேவைகள் (சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து) சீர்குலைந்துள்ளமை.
- சீரற்ற போக்குவரத்துச் சேவைகள்.
- பிரயாணங்களில் பாதுகாப்பற்ற நிலை.
- உயிருடன் வீடு திரும்புவோமா என்ற அச்ச மனநிலை.
- உறவுகள் துண்டிக்கப்பட்டுள்ளதால் மீண்டும் உறவினர்களுடன் சந்திப்பு இடம் பெறுமா? என்ற ஏக்கம்
- சிவில் சமூகத்தின் மீதான அழுத்தங்களும் அடக்குமுறைகளும்.
- பணப்புழக்கம் வரையறுக்கப்பட்டளவு இருந்தாலும் பொருட்களை வாங்க முடியாத நிலை.
- குடாநாட்டின் அன்றாட நடப்பு விவகாரங்கள் உண்மைத் தன்மைகளுடன் வெளி உலகுக்கு தெரியப்படுத்தப்படாத நிலை.

நன்றி : Empathy (உணர்வொன்றுதல்) யாழ். பல்கலைக்கழக வெளியீடு இதழ்-

## கொக்கா கோலா பெப்சி அமெரிக்க ஊடுருவலின் சின்னங்கள்




கொக்கா கோலா பெப்சி ஆகியன அமெரிக்க ராட்சத பல்தேசிய நிறுவனங்களின் அபாயகரமான குளிர்பானங்களாகும். உடல் நலத்திற்கு ஊறு விழைவிக்கும் அதே வேளை அந்தந்த நாடுகளின் தேசியத் தன்மை வாய்ந்த இயற்கை நலம் சார்ந்த குளிர்பானங்களின் உற்பத்திகளை அழித்தொழித்தும் வருகின்றன. அதேவேளை அதிகரித்த விளம்பரங்களுடன் நாளாந்தம் கோடிக் கணக்கான பணத்தை பெருலாபமாகவும் சுருட்டிச் செல்கின்றன. இந்த கோக்கும் பெப்சியும்.


இலங்கையில் இவற்றுக்கு எதிரான எதிர்ப்பு இயக்கம் மிகமிகக் குறைவானதாகும். கால் நூற்றாண்டு கால தேசிய இனப்பிரச்சினையின் யுத்தமானது தமிழ் சிங்கள முஸ்லீம் மக்களை ஒருவரோடு ஒருவரை மோத வைத்து வந்த சூழலில் அதன் மறைவிலே அமெரிக்க கோக்கும் பெப்சியும் அதே மக்களிடம் எவ்வித எதிர்ப்பும் இன்றி திணித்து நாகரீக குளிர்பானமாக மாற்றப் பட்டுள்ளது. இப்படி எத்தனையோ பல்தேசிய நிறுவனங்கள் இலங்கைக்குள் புகுத்தப்பட்டதுடன் அவற்றின் ஆபத்துக்கள் பற்றி மக்கள் அறிந்து கொள்ளாத வகையில் யுத்தத்தால் திரையிடப் பட்டு வருகின்ற நிலை தொடர்கிறது.

ஆனால் இந்தியாவில் இதே கொக்காகோலா, பெப்சிக்கு எதிராக மக்கள் இயக்கங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இரண்டு மாதங்களுக்கு முன்பு கேரளம், குஜராத். கன்னடம் போன்ற மாநில அரசுகள் கோக்குக்கு தடைவிதித்தன. மக்கள் கோக்கை அடித்து விரட்ட பல விதப் போராட்டங்களில் இறங்கினர். மாக்சிச லெனினிச இயக்கங்கள் கட்சிகள் களத்தில் இறங்கிப் போராடியும் வருகின்றன. அதேவேளை தமிழகத்தில் கருணாநிதி தலைமையிலான "தமிழர் ஆட்சி" கொக்கோகோலாவை எதிர்க்கத் திராணியற்று நிற்கிறது. அது மக்களின் விருப்பம் எனக் கூறி அமெரிக்க எசமானர்களுக்கு ஆலவட்டம் பிடிக்கிறது. அண்மையில் சென்னை நகரில் கோக் பெப்சிக்கு எதிரான ஒரு ஓவியக் கண்காட்சி இடம் பெ ற்றது. அதில் கோக்கை-பெப்சி யை அம்பலப்படுத்திய ஓவியங்கள் பல காட்சிக்கு




வைக்கப்பட்டன. அதில் ஒரு புள்ளி விபரம் தரப்பட்டி ருந்தது. இந்தியாவில் கொக்கோ கோலா ஆலைகள்- 52, பெப்சி ஆலைகள் 38 ஒவ்வொரு ஆலை யும் நாளாந்தம் உறிஞ்சும் தண்ணீரின் அளவு 15 லட்சம் லீட்டராகும். மொத்தம் ஒரு நாளுக்கு உறிஞ்சப்படும் தண்ணீர் 13.5 கோடி லீற்றராகும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேலும் அங்கே வைக்கப்பட்டிருந்த கலைஞர் கருணாநிதியின் நிலை பற்றிய கேலிச் சித்திரத்துடன் கூடிய கடிதம் ஒன்று வரையப் பட்டிரு ந்தது. அதனை இங்கே தருகின் றோம்.



**உடன் பிறப்பே!**

தம்பி பில்கேட்ஸ் என் இல்லம் தேடி வந்து அமெரிக்காவிற்கு வந்தே தீரவேண்டும் என்று எனக்கு அன்புக் கட்டளையிட்டதை நீ அறிவாய். இந்த நாடே அறியும். அந்த அன்புத் தம்பி நேற்றுக் கனவில் வந்தான். "கொக்கா கோலாவிற்கு உங்கள் நாட்டில் தடையாமே! அண்ணா. இதென்ன கொடுமை" எனக் குமுறினான். "கலங்கதோதம்பி நாடி வந்த நட்புக்காக ஓடிவந்து நஞ்சும் குடிப்பான் தமிழன்" என்றேன். தம்பி. கோலா என்பது இரண்டெழுத்து. அதைக் காக்கும் கொள்கை என்பது மூன்றெழுத்து.

## கொலைகளும் பட்டினியும்

அண்மைக்காலங்களில் தமிழ் மக்கள் காணாமற் போவது, கொலை செய்யப்படுவது என்பது 2005ம் ஆண்டு ஒக்டோபருக்குப் பிறகு பரவலாக இடம் பெற்றுவருகிறது. இதன் பின்னணியில் யார் உள்ளனர் என்பது பகிரங்க இரகசியம். மிகவும் பாதுகாப்பான இடமெனப்படும் கொழும்பு மாநகரில் யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந. ரவிராஜ் ரி. 56 துப்பாக்கியால் கொலை செய்யப்பட்டமை குற்றம் புரிந்தவர்கள் யாராக இருக்கலாம் என்பதை மக்கள் ஊகிக்க முடிகிறது.

ஒக்டோபர் 2005கும் 2006 பெப்பரவரிக்குமிடையில் சுமார் 200 கடத்தல் கொலைச் சம்பவங்கள் வடக்கு கிழக்கு கொழும்பில் இடம் பெற்றுள்ளன. ஆட்கடத்தல், அதைத் தொடர்ந்து கப்பம் பெறுதல், கப்பம் இல்லையென்றால் கொலை செய்தல் என்பன இப்போது தினமும் கிரிக்கட் ஸ்கோர் மாதிரி கேட்க வேண்டிய அவல நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். பொலீஸ் மா அதிபர் ஊடகங்களைப் பொறுப்புடன் நடந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டுள்ளார். இது வரை நடந்துள்ள கொலைகள் தொடர்பாகவோ அல்லது கடத்தல்கள் தொடர்பாகவோ எந்த ஒரு கொலையாளியையோ கடத்தல்காரரையோ கண்டு பிடித்ததாகவில்லை. அவுஸ்ரேலிய நிபுணர்கள் ஸ்கொட்லன்யாட் நிபுணர்கள் எனப்பட்டவர்கள் எவர் வந்தாலும் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கப் போவதில்லை. ஏன் என்பது விளக்க வேண்டியதில்லை. அரசாங்கத்தின் ஒவ்வொரு செயலும் போர் நிறுத்தம் நடைமுறையில் உள்ளதாக தெரிவிக்கும் அதே வேளை பதில் தாக்குதல் என்ற பேரில் தமிழ் மக்களைக் கொன்று பயமுறுத்தி பட்டினிபோட்டு இன ஒடுக்கலைத் தொடர்கிறது. இவை அனைத்தும் இறுதியில் அன்னியத் தலையீட்டிற்கே வழிவகுக்கும் என்பதே உலகின் இடம்பெற்ற அனுபவமாகும்.

## மகிந்த சிந்தனையின் வெளிநாட்டுக் கொள்கை

மகிந்த ராஜபக்ஷ ஒரு மேற்குலக எதிர்ப்பாளர் என்றும் அமெரிக்க சார்பற்றவர் என்றும் பலர் நம்பி வந்தனர். ஆனால் ஜனாதிபதியாகி மகிந்த சிந்தனையை நடைமுறைப்படுத்தி வரும் வேளையில் தான் அவரது அமெரிக்க மேற்குலக சார்பு நிலைப்பாட்டை அடையாளம் காண முடிகிறது. இதன் மூலம் இன்றைய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கை தெளிவாகிறது.

1- ஐ.நா. பாதுகாப்புச் சபைக்கு நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளின் தெரிவில் வெனிசுலேவா நாட்டிற்கு எதிராக வாக்களிப்பதில் தனது முன்னைய நிலைப்பாட்டை மாற்றி அமெரிக்காவின் விருப்பிற்கு அமைய கௌதமாலாவிற்கு இலங்கை வாக்களித்தது.

2- கியூபாவில் மனித உரிமை மீறல்கள் பற்றிய அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கும் இலங்கை ஆதரவாக வாக்களித்தது.

3- பலஸ்தீனத்தில் இஸ்ரேல் நடத்திவரும் அடாவடித்தனத் தாக்குதல்களைக் கண்டிக்கும் தீர்மானம் ஐ. நா. வில் கொண்டுவரப்பட்ட போது அதனை அமெரிக்கா தனது ரத்து அதிகாரம் பயன்படுத்தியது. இவ் வாக்கெடுப்பில் இலங்கைப் பிரதிநிதி பங்கு கொள்ளாது காணாமல் போனார். இவ்வாக்கெடுப்புக்கு இரண்டு தினங்கள் பின்பே இணைத் தலைமை நாடுகள் கூடி இருந்தன என்பது கவனத்திற்குரியதாகும். இவற்றுக்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரா எங்களின் பயங்கரவாத எதிர்ப்பு போராட்டத்திற்கு அமெரிக்கா உதவி வழங்கி வருகின்றது. ஆதலினால் நாம் அமெரிக்காவிற்கு ஆதரவு வழங்க வேண்டியது கடமை எனக் கூறியினார்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# அவசரகாலச்சட்டத்தால் போராடமுடியாது என்பவர்கள் அதற்கு ஆதரவளிப்பதேன்?

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வை வென்றெடுப்பதற்கு வேலை நிறுத்தப் போராட்டங்களை, 'பிக்கட்ரிங்கையோ' செய்வதற்கு அவசரகாலச் சட்டம் தடையாக இருப்பதாக கூட்டுஒப்பந்தத்தில் 'கைச்சாத்திடத் தகுதிபெற்றுள்ள' தொழிற் சங்கங்களின் தலைவர்கள் கூறுகிறார்கள். அவர்களில் சிலர் அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணைக்கு பாராளுமன்றத்தில் வாக்களித்துள்ளார்கள். சிலர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் அவர்கள் எல்லோருமே ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிற்கு ஆதரவாக இருப்பதுடன் சிலர் அமைச்சுப் பதவிககளையும் பெற்றுக்கொண்டுள்ளனர். இ.தொ.கா வும், ம.ம.முயும் அரசாங் கத்துடன் இணைந்திருக்கின்றன.

அருள்சாமி, அய்யாத்துரை, சதாசிவம் போன்றவர்கள் பாரளுமன்றத்தில் இல்லாவிட்டாலும் அவர்களும் அரசாங்கத்திற்கு ஆதரவானவர்களே.

லங்கா தோட்டத்தொழிலாளர் யூனியன், செங்கொடிச்சங்கம் என்பவையும் சம்பளப்பிரச்சினைப் பற்றி அறிக்கைவிட்டாலும் அவையும் அரசாங்கத்துடன் இணைந்தே இருக்கின்றன.

அவசரகாலச்சட்டத்தினால் போராட முடிவதில்லை என்று கூறுபவர்கள் அவசரகால சட்டத்திற்கு ஆதரவளிப்பதுடன் அச்சட்டத் தினை நடைமுறைப்படுத்துடன் அரசுடன் உறவாடுகின்றனர். சம் பள உயர்வு பற்றி அறிக்கை விடுபவர்களும் அரசிற்கு ஆதரவாகவே இருக்கின்றனர். இவர்கள் பெருந்தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள்.

சம்பள உயர்வை வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தனியார் கம்பெனிகளை தாலாட்டும் வகையில் தொழிலாளர்கள் மெதுவாக வேலை செய்யும் போராட்டங்களை முன்னெடுப்பதாக மலையகத் தலைவர்கள் எனப்படுவோர் கூறுகின்றனர். மெதுவாக வேலை செய்வதால் தோட்டக்கம்பெனிகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படப் போவதில்லை. இருந்தும் அதனை ஒரு போராட்ட வழிமுறையாக கொள்வதன் உள்நோக்கம் என்ன? வழமை போல் தோட்டக் கம்பெனிகளிடம் 'பெருந்தொகைகளை' பெற்றுக் கொள்வதை விட வேறெதுவும் இருக்க முடியாது.

திடீரென ஆறுமுகம் தொண்டமான் அவரது அமைச்சர் பதவியை இராஜினாமா செய்வததாக கூறப்பட்டது. தோட்டக்கம்பெனிகள் சம்பள உயர்வை வழங்க வேண்டும் என்று அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று அவர் இராஜினாமா செய்யவில்லை. மாறாக அவரது அமைச்சுக் காரியாலயத் தில் போதிய வசதிகள் இல்லையென்றே அவர் இராஜினாமா செய்ததாக கூறப்பட்டது. ஆனால் அந்த இராஜினாமா ஏற்றுக்கொள்ளப்படவில்லையாம். அவருக்கு இன்னும் 'அந்த பழைய நீர்வடிகாலமைப்பு கணினிமயத்திட்டம்' தனக்கு கிடைக்க வேண்டும் என்பதில் அதிக அக்கறை இருக்கிறது.

அவர் அமைச்சராகிவிட்டால் அடுத்தவரான சந்திரசேகரனுக்கு சும்மா இருக்க முடியாது. அவரும் அமைச்சராகிவிட்டார். பெரிய போராட்ட வீரனைப் போன்று பேசுவதில் ஒன்றும் குறைச்சல் இல்லை.

இ.தொ.கா, ம.ம.மு ஆகிய இரண்டும் அரசாங்கத்துடன் இணைந்ததால் பாதிக்கப்பட்டவர்களான அருள்சாமி, சதாசிவம் போன்றவர்ளும் அவ்வப்போது சிணுங்குகிறா ர்கள். ஜே.வி.பி, எம்.பி சந்திரசேகரனும் அவ்வப்போது தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப்பிரச் சினை பற்றி அறிக்கைவிடுகிறார்.

பெருந்தோட்டங்கள் இன்னும் அரசாங்கத்திற்கே சொந்தமாக இருக்கின்றன. தனியார் கம்பெனிகளுக்கு தோட்டங்கள் மீது குத்தகை உரிமையும், முகாமைத்துவ உரிமையும் கொண்டுள்ளன. அதனால் தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வுப் பிரச்சினையில் அரசாங்கம் தலையிட வேண்டும் என்று வற்புறுத்துவதற்கு இடம் இருக்கிறது. அதனை செய்யாது அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருப்பதும் அரசாங்கத்திற்கு ஆத ரவளிப்பதும் துரோகமானது என்பது சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரியாமல் இல்லை. அதுதான் அவர்களின் அரசியல். அதனை புரிந்து கொண்டு மாற்று நடவடிக் கைகளில் இறங்க வேண்டியது தொழி லாளர்க ளின் கடமையும் பொறுப்புமாகும்.

அமைச்சர்களாக இருப்போர் தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படாவிட்டால் அமைச்சர் பதவிகளை இராஜினமா செய்யப் போவதாக பேச்சிற்கு கூட சொல்ல மாட்டார்கள் என்று யார் வேண்டுமானாலும், எவ்வளவிற்கும் பயப்படாமல் பந்தயம் கட்டலாம். ஏனெனில் அவர்கள் சொல்லப் போவ துமில்லை. சொன்னால் தடுப்பதற்கு கூட எவரும் இல்லை.

அழகேசன்

## கிட்டு எழுதும் கடிதம் !

# மருத்துவமும் மலையகமும்

வணக்கம்.

இலங்கைப் போன்ற மூன்றாம் உலக நாடுகளில் மருத்துவத்துறையின் வளர்ச்சியும், சுகாதாரச் சேவையின் செயற்பாடும் எத்தளவுக்கு மக்களுக்கு சென்றடைகிறது என்பது கேள்விக்குறியே. இலங்கையின் முழுமையான சுகாதார நிலைமைகளையும், மருத்துவத் துறையையும் பற்றிக் கதைத்தால் கதைத்துக் கொண்டே இருக்கலாம். மலையகத்தின் சுகாதார நிலைமைகளைப் பற்றி கதைப்போமே.

பெருந்தோட்டப் பிரதேசங்களில் சுகாதார வசதியளிக்கும் நிறுவனமாக "ட்ரஸ்ட்" (Trust) நிறுவனம் செயற்படுகிறது. இந்த நிறுவனத்தின் சேவை மகோன்னதத்தை விரிவாக ஆராயும் நோக்கம் எனக்கில்லை. பெருந்தோட்ட சுகாதார சேவையினை தனியாருக்கு கையளித்தமை மிக மோசமான தவறுதானே.

தோட்டங்களில் உள்ள வைத்தியசாலைகளில் சுகாதார அதிகாரிகளும் இருக்கமாட்டார்கள். அப்படி ஒருவர் இருந்தாலும் மருந்துகள் பெரிதாக ஒன்றும் இருக்காது. கடுமையான வருத்தம் உள்ளவர்களையும், கர்ப்பிணி பெண்க்ளையும் ஏற்றிச் செல்லம் அம்புலன்ஸாக தோட்டத்தின் லொறியே செயற்படுகிறது.

அது தவிர தோட்டங்களுக்கு அருகில் உள்ள மாவட்ட வைத்திய சாலைகளின் நிலைமையும் மிகவும் பரிதாபகரமானதாகும். கொட்டக்கலை, வட்டவளை, பொகவந்தலாவ போன்ற இடங்களில் உள்ள மாவட்ட வைத்தியசாலைகளின் சேவையை எதிர்பார்த்து அந்தப் பிரதேசங்களில் பெருமளவான மக்கள் உள்ளனர்.

ஆயினும் இந்த வைத்தியசாலைகளில் போதிய வசதிகள் இல்லை. பெருமளவு நோயாளிகளைக் கொள்ளக்கூடிய வார்டுகள் இல்லை. மகப்பேற்று வார்டுகளில் போதிய வசதிகள் இல்லை. சில நேரங்களில் அதிகளவான வெளிநோயாளர்கள் வரும்போது நீண்ட நேரம் காத்திருந்தே மருந்தெடுக்கிறார்கள்.

இங்கெல்லாம் போதிய மருத்துவர்களும் மருத்துவவசதிகளும் இல்லை. நோயாளர்களே சில மருத்துவப் பொருட்களை வாங்கிக் கொடுக்க வேண்டப்படுகிறார்கள். வாழ்க்கைச் செலவை சுமக்க முடியாத நிலையில் தான் இலவச சேவையை எதிர்ப்பார்த்து மக்கள் வருகிறார்கள். அங்கும் இதே நிலை என்றால் எங்கு போய் முறையிடுவது. அது மாத்திரமின்றி வைத்தியசாலை ஊழியர்களின் எசமானத்துவப் போக்கு நோய்களை புதிதாக ஏற்படுத்த வல்லது. இந்த வைத்தியசாலைகளில் போதிய கட்டிடங்கள் அமைக்க இடவசதி இருந்தும் அவை மரக்கறி தோட்டங்களாக மாறியுள்ளன.

நுவரேலியா மாவட்டத்தை பொறுத்தவரை பெருமளவில் மக்கள் தொகை கொண்ட ஒரு மாவட்டம். ஆதார வைத்தியசாலை ஒன்று மட்டுமே நுவரேலியாவில் உள்ளது. அதுவும் முறையாக இயங்குவதில்லை. ஏதேனும் கடுமையான வருத்தம் எனில் நாவலப்பிட்டி, கண்டி என விரைய வேண்டும்.

அருகாமையில் போதிய மருத்துவ வசதிகள் இல்லாமையே தோட்டப் பிரதேசங்களில் அதிகமாக மரணங்கள் சம்பவிக்கின்றன. புதிய நோய்களை கண்டறிய முடியாத நிலையும் தொடர்கிறது.

இந்த முதலாளித்துவ அரசில் மக்கள் முழுமையான மருத்துவ வசதிகளையோ அடிப்படை வசதிகளையோ எதிர்ப்பார்க்க இயலாது. நுவரேலியா மாவட்டத்தில் இன்னும் இரண்டு மூன்று ஆதார வைத்தியசாலைகளும் பல புதிய மாவட்ட வைத்தியசாலைகளும் தோற்றுமாயின் இப்போதுள்ள நிலைமையை விட சற்று முன்னேற்றகரமானதாக இருக்கும்.

மலையகத்தின் அரசியல் வாதிகள் தற்போது அமைச்சுப் பதவிகளில் உள்ளனர். குறிப்பாக பிரதி சுகாதார அமைச்சரும் மலையகத்தைச் சேர்ந்தவர் தான். அண்மையில் மருத்துவ குறைபாட்டால் ஏற்பட்ட சில மரணங்களின் போது அறிக்கை விட்டே சமாளித்து விட்டார்.

மலையகத்தின் அரசியல் வாதிகள் இது விடயத்தில் எந்தளவுக்கு கவனம் எடுப்பார்கள் என்பதே என் மனதில் எழும் கேள்வி. மக்கள் தமது பிரச்சினைகள் நலன்களுக்காகப் போராட முன்வரல் வேண்டும். அப்பொழுது தான் சீர்கெட்டுக் கிடக்கும் மலையக சுகாதார மருத்துவத்துறையில் மாற்றம் கொண்டுவர முடியும்.

இப்படிக்கு
கிட்டு

# மலையகத்தில் அதிகரித்துவரும் மரக் கடத்தல்

அண்மைக் காலமாகவே மலையகத்தில் பெருமளவான மரங்கள் கடத்தப்பட்டு வருகின்றன. சில காலங்க ளாகவே ஹட்டனுக்கும், நாவலப் பிட்டிக்கும் இடைப்பட்ட பெருந் தோட்டப் பிரதேசங்களான டெம் பள்ஸ்டோ, ஹைட்ரி, மைலாடி, பார் கேபிள், வெஸ்ட்ஹோல் போன்ற பிர தேசங்களில் பெருந் தொகையான மரங்கள் கடத்தப்பட்டுவிட்டன.

இந்தக் கருப்பன்தையிலை 'றேப்பன்ரயில்' மரங்கள் ஒரு காலத்தில் இந்தப் பிரதேசத்திலுள்ள தேயிலை தோட்டங்களைக் காடாக்குவதை நோக்கமாகக் கொண்டு நாட்டப்பட்டவையாகும். எனினும் இயற்கைச் சமனிலைக்குத் தாவரங்கள் பெரிதும் பங்காற்றுகின்றன. அதிகளவான காடுகள் அழிக்கப்பட்டமையே உலகில் இன்று நீர் வளம் குறைந்திருப்பதற்கும், வளிமண்டலத்தில் காபனீரொட்சைட்டின் வீதம் கூடியிருப்பதற்கும் காரணமாகும்.

அந்த வகையில் இந்தப் பிரதேசத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் இந்தச் சட்ட விரோத மரம் கடத்தும் செயல் தடுத்து நிறுத்தப்பட வேண்டியதாகும். ஒரு குறிப்பட்ட தோட்டத்தில் மரங்களை வெட்டுவதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டு, அதைச் சான்றாக பாவித்து இந்தப் பிரதேசத்திலுள்ள பயன் தரும் ஏனைய பெறுமதிமிக்க மரங்களையும் வெட்டுகிறார்கள்.

சில பெருமுதலாளிகளும் இங்குள்ள கீழ் மட்ட அரசியற் புள்ளியும் சில அரச அதிகாரிகள் உத்தியோகத்தர்களும் இணைந்தே இந்தச் சட்ட விரோதச் செயலைப் புரிகிறார்கள். இது தொடர்பாகவும், இயற்கை அழிப்புகள் தொடர்பாகவும் மலையகத்து கோமாளித் தலைவர்களுக்கு தெரிய நியாயமில்லை.

இந்தக் கடத்தலுக்காக கனரக வாகனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த வாகனங்களை தாங்குவதற்கு இங்குள்ள வீதிகள் தகுதியற்றவையாகும். அதனால் அவை பயணம் செய்ய அனுமதியளிக்கப்படுவதில்லை. ஆயினும் அதையும் மீறி இந்த வாகனங்கள் கடத்தலில் ஈடுபடுத்தப்படுகின்றன. இதனால் சமீபத்தில் சீர் செய்யப்பட்ட வீதிகள் பெரிதும் பழுதடைந்து குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன. சில பாலங்கள் உடைந்தும் உள்ளன. இதன் காரணமாக பிரதேச மக்கள் போக்குவரத்து சிரமங்களால் அவதியுறுகிறார்கள். எனவே இது சம்பந்தமான தெளிவுகளை பிரதேச மக்களுக்கு ஏற்படுத்துவது அனைவரின் கடமையாகும். இந்தக் கடத்தலுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்டவர்களுக்கு அழுத்தங்களைக் கொடுக்க வேண்டும். அத்துடன் சட்ட நடவடிக்கைகளுக்கும் அப்பால் மக்கள் தம்முன்னே நடைபெறும் இயற்கை அழிப்பைத் தட்டிக்கேட்டு தடுத்து நிறுத்த முன்வரல் வேண்டும்

-இரட்ணம்-

# லோரன்ஸின் அரசியல் அடையாளம் என்ன?

தேசிய இனப்பிரச்சினை நிலைப்பாடு தொடர்பான முரண்பாடு காரணமாகவே சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து தூரே சென்று காமினி யாப்பா தலைமையிலான 'கீழைக்காற்று' இயக்கத்துடன் சேர்ந்து இயங்கியதாக கூறும் ஏ. லோறன்ஸ் தற்போது மிகவும் முற்போக்கானகட்சியின் உப தலைவராக இருக்கி றாரா?

அண்மையில் 'மலையக மக்கள்' பற்றிய நூலொன்றை வெளியிட்டுள்ள ம.ம.முவின் உபதலைவர் லோறன்ஸ் அப்புத்தகத்தின் பின் அட்டையில் பாடசாலை காலத்தில் சண்முகதாசன் தலைமையிலான இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருக்கமாக இருந்தார் என்றும் அக்கட்சி தேசியஇனப் பிரச்சினை தொடர்பாக எடுத்த நிலைப்பாட்டில் அவருக்கு இருந்த முரண்பாடு காரணமாக காமினி யாப்பா தலைமையிலான 'கீழைக்காற்று' இயக்கத்துடன் சேர்ந்து இயங்கினார் என்றும் எழுதப்பட்டுள்ளது. அப்புத்தக அறிமுகவிழாபற்றி பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளிலும் அவ் விடயம் குறிப்பிடப்பட்டிருந்தது. இது அவரின் அரசியல் வாழ்க்கை பற்றிய விபரம் என்று சொன்னாலும் அவர் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியுடன் நெருக்கமாக இருந்ததாக கூறுவதையும் கீழைக்காற்று இயக்கத்தில் இருந்ததாக கூறுவதையும் பிழையான அரசியல் நிலைப்பாடு என்று இப்போது கூறுகிறாரோ? தற்போது இருக்கும் ம.ம.மு.முற்போக்கான இடம் என்கிறரா? அல்லது முன்பு முற்போக்கான இடங்களில் இருந்துவிட்டு தற்போது பிற்போக்கான இடத்தில் இருப்பதாக கூறுகிறாரா?

நானும் ஒரு காலத்தில் கம்யூனிஸ்ட்டாக இருந்ததாக கம்யூனிஸ விரோதிகள் தமது பிற்காலங்களில் கூறுவதுண்டு. லோரறன்ஸ்சும் அதைத்தான் சொல்கிறார்; ஆனால் வித்தியாசமாக சொல்கிறார்.

-மதி-

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
புதிய பூமி
புதிய பூமி
Puthiya Poomi
சுற்று 13 டிசம்பர் 2006 பக்கம் 12 விலை 15/ சுழற்சி 98
இல. 47, 3ம் மாடி, கொழும்பு மத்திய சந்தைக் கட்டிடத் தொகுதி.
கொழும்பு 11, இலங்கை. தொ.பே: 060 2136530, தொலை நகல்:011-2473757
E-mail : puthiyapoomi@hotmail.com, web : www.ndpsl.org.

# ஆளும் வர்க்க வரவு செலவுத் திட்டம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தேசியத் தலைவர் போன்று காட்டிக் கொள்கிறார். சிலர் விடயங்களில் மிகவும் பிடிவாதமாக இருப்பதாக காட்டிக் கொள்கிறார். அந்தப் பிடிவாதங்கள் அவரது 2007 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தில் இருக்கின்றன. இது இலங்கையின் வரலாற்றில் சமர்ப்பிக் கப்பட்ட 60 வது வரவு செலவுத்திட்டமாகும். இந்த வரவுசெலவுத்திட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்குவது தொடர்பாக எந்தவொரு யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை. ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருக்கு 50 சதவிதத்திற்கு மேலான சம்பளஉயர் வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கு 2006 ஜனவரி முதலாம் திகதியிலிருந்து சம்பள உயர்வும் நிலுவையுடன் வழங்கப்பட்டுள்ளது. 2007 ஜனவரி மாதம் முதல் மேலும் சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளது.

அதேவேளை இம்முறை வரவு செலவுதிட்டத்தில் அரசாங்க ஊழியர்களுக்கு சம்பள உயர்வு இல்லை. தனியார்துறை ஊழியர்களுக்கும் எதிர்பார்க்க முடியாது. தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வை தோட்டக்கம்பெனிகள் தொடர்ந்து மறுத்து வருகின்றன என்பதும் தெரிந்ததே.

வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்பு செலவீனம் 45 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இது யுத்தம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என்பதை உணர்த்துவதாக அமைந்துள்ளது. அரசாங்கத்தின் அபிவிருத்தித்திட்டங்கள் அரசாங்க உற்பத்தி தொழிற்துறை போன்றன பற்றி கவனம் செலுத்தப்படவில்லை. இடைத்தர தொழிற்துறைகளை ஊக்கிவிக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் இடைத்தர தொழிற்துறைகளுக்கு ஊக்குவிப்பதற்கான நிதியுதவிகளை செய்யும் நிலையில் வங்கிகளும், நிதிநிறுவனங்களும் இல்லை

நடைமுறையிலுள்ள அரசாங்கத்துறைகள் விவசாயம் தொழில்துறைகள் போன்றவற்றை ஊக்குவிக்க இதுவரையும் குறைந்தளவிலாவது வரவு செலவுத்திட்டத்தினூடாக வழங்கப்பட்ட மானியங்கள் இம் முறை நிறுத்தப்பட்டுள்ளன. இது உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் போன்றவற்றின் எதிர்பார்ப்பை பூர்த்தி செய்வதாக இருக்கிறது. அவை மானியங்களை வழங்க வேண்டாமெனவும் குறிப்பாக சுகாதாரம், கல்வி, போக்குவரத்து போன்ற துறைகளுக்கு கூட அதிகளவு மானியம் வழங்கப்படக் கூடாதெனவும் தொடர்ந்து இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்தி வருகின்றன.

அத்தியாவசியப் பொருட்களுக்குரிய விலை உயர்வுகளை கட்டுப்படுத்துவது தொடர்பாக வரவுசெலவுத்திட்டத்தில் கவனம் செலுத்தப்படவில்லை. இதனால் சாதாரண பொதுமக்களுக்கு மேலும் வாழ்க்கைச் செலவுச் சுமை ஏற்றப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிற்துறை வளர்ச்சிக்கான பல திட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. அதன் விபரங்கள் வெளியிடப்படாத போதும் அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டால் பெருந்தோட்டக்கம்பெனிகளே நன்மை அடையும். தொழிலாளர்கள் நன்மை அடையப் போவதில்லை. பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு குறைந்த விலையில் அரிசி, மா ஆகிய விநியோகிக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது. இது குறைந்த வருமானத்தைப் பெறும் தோட்டத்தொழிலாளர்களுக்கு சலுகையாக அமையும் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் அது நடைமுறைக்கு வருமென்று நம்பிக்கை கொள்ள முடியாது. தோட்டத்தொழிலாளர்களுக்கு மட்டும் சகாயவிலையில் அரிசி, மா ஆகியவற்றை விற்பதால் ஏனையவர்களின் அடிப்படை உரிமை அதாவது எல்லோரையும் சமத்துவமாக நடத்தும் உரிமை மீறப்படுவதாகக் கூறி அவர்களுக்கு சார்பாக நீதிமன்றத் தீர்ப்பையும் பெற்றுக்கொள்ள முடியும். அத்துடன் தோட்டத்தொழிலார்களுக்கு 'பிச்சை' போடத்தேவை இல்லை. அவர்களுக்குரிய நியாயமான வேதனத்தை உறுதி செய்தால் அவர்கள் ஏனையோருக்கு சமமானவர்களாகலாம். ஆனால் அரசாங்கம் அதனைச் செய்யப்போவதில்லை.

வடக்கு, கிழக்கில் சில இடங்களிலும் மக்களுக்கு அத்தியாவசியப் பொருட்கள் கிடைக்கவில்லை. யாழ்ப்பாண குடா நாட்டின் வங்கி நடவடிக்கைகள் முடக்கப்பட்டுள்ளன. இவை தற்போது அப்பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைளாலும் ஏ9 பாதை மூடப்பட்டுள்ளதாலும் ஏற்பட்ட விளைவாகும். இவ்வாறான சூழ்நிலையில் இந்த வரவு செலவுத்திட்டத்தின் ஜனாதிபதி அவரது அரசாங்கத்திற்கு தேவையான பலவிடயங்களை நிறைவேற்றிக் கொண்டுள்ளார். அதில் குறிப்பிடத்தக்க சில விடயங்கள் இருக்கின்றன.

தொடர்ந்து யுத்தத்தை நடத்துவதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு கொழுத்த சம்பளம் உயர்த்தப்பட்டுள்ளது.

உலகவங்கி, சர்வதேச நாணயநிதியம் போன்றவற்றின் எதிர்பார்ப்பிற்கிணங்க மானியங்கள் வழங்கப்பட வில்லை, அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்படவில்லை.

அரச- தனியார் ஊழியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

ஆனால் நாட்டு மக்கள் நாட்டிற்காக தியாகங்களை செய்யவேண்டும் என வரவு செலவுத்திட்ட உரையினூடாக ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார். நாட்டின் சாதாரண மக்களை வாழ்க்கைச்செலவினாலும் யுத்தத்தினாலும் ஏற்படுகின்ற பாதிப்புகளுக்குள் தள்ளி அதனை நியாயப்படுத்தும் விதமான வார்த்தை ஜாலங்களால் வரையப்பட்டுள்ளதே அண்மைய வரவு செலவுத்திட்டமாகும். உண்மையில் இது ஆளும் வர்க்கத்தின் தேவைக்கான இன்னுமொரு வரவு செலவுத்திட்டமேயாகும்.

**ஆசிரியர் குழு**

# மலையகத்திலிருந்து ஐந்து அமைச்சர்கள் மக்களுக்கு கிடைப்பது எதுவுமில்லை

மலைக மக்களுக்கு பொய் வாக்குறிகள் வழங்கி தமது பண பலம் தொழிற்சங்க அரசியல் ஆதிக்கத்தின் மூலம் பாராளுமன்றம் சென்றவர்கள் இ. தொ. க, ம. ம. மு உறுப்பினர்கள். இவர்கள் இன்று மட்டுமல்ல அன்றிலிருந்தே ஏமாற்று அரசியல் தொழில் புரிந்து வந்தவர்கள். அதனால் பேரினவாத ஆளும் வர்க்க அரசாங்கம் எது வந்தாலும் அதில் எப்படியும் நுழைந்து அமைச்சர் பதவி பெற்று விடுவார்கள்.

அந்த வகையில் மகிந்த சிந்தனை அரசாங்கத்தில் அங்கம் பெறும் 91 அமைச்சர்களில் இந்த மலையகத் தமிழ் அமைச்சர்களும் அடக்கம். இருவர் முழு அமைச்சர்கள். மூவர் பிரதி அமைச்சர்கள். இவ்வாறு அமைச்சுப் பதவியில் இருந்து வருவது மலையக மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கல்ல என்பது யாவரும் அறிந்து வைத்திருக்கும் உண்மையாகும். அமைச்சு சம்பளங்கள் சலுகைகள் சுகபோகங்கள் மற்றும் அனுபவிப்புகளைப் பெற்றுக் கொண்டு அரசாங்க சார்பாக கை உயர்த்தி வருவதே அவரக்ளுக்குரிய கடமையாகும். மலையக மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளுக்கோ துன்பதுயரங்களுக்கோ இந்த அமைச்சர் பெருமக்கள் எதையும் செய்ய மாட்டார்கள்.

இப்பொழுது மலையகத் தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பாரிய பிரச்சினை தாங்க முடியாத வாழ்க்கைச் செலவின் சுமையாகும். இதற்கு முகம் கொடுக்கக் கூடிய சம்பள உயர்வு இல்லை. இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை கையொப்பமிடப்படும் கம்பனிகள்– தொழிற்சங்கங்களின் கூட்டு ஒப்பந்தம் கடந்த ஒக்ரோபர் மாதத்துடன் காலாவதியாகி விட்டது. கடந்த ஒப்பந்த காலத்தில் ஒப்புக் கொண்ட அற்ப சம்பள உயர்வினால் கடந்த இரண்டு வருடத்தில் தொழிலாளர்கள் மேலும் மோசமான வாழ்க்கை நிலைக்குத் தள்ளப்பட்டனர். இவ்வருடம் புதிப்பிக்கப்படும். சம்பள ஒப்பந்தத்தில் ஏதாவது உயர்வு கிடைக்குமா என்ற எதிர்பார்ப்புடன்னேயே இருந்து வருகின்றனர்.

ஆனால் இந்த ஐந்து அமைச்சர்களை உள்ளடக்கிய பிரதான தொழிற்சங்கங்கள் தமது வழமையான ஏமாற்றில் இறங்கியுள்ளன. தாம் அங்கம் வகிக்கும் அரசாங்கத்தை வற்புறுத்தி வரவு செலவுத்திட்டத்தில் மலையகத் தொழிலாளர்களின் சம்பள உயர்வுக்கு வழி தேட முடியவில்லை. அதேவேளை தோட்டக் கம்பனிகளுக்கு எதிராக உறுதியான போராட்டத்தை நடாத்தி சம்பள உயர்வுக் கோரிக்கையை வென்றெடுக்கவும் தயாராக இல்லை. தொழிலாளர்கள் எத்தகைய போராட்டங்களுக்கும் தயாராகவே இருக்கின்றனர். அதன் வெளிப்பாட்டை ஆங்காங்கே தன்னெழுச்சிப் போராட்டங்களாகக் காணமுடிகிறது.

சம்பள உயர்வுப் பிரச்சினையில் மட்டுமன்றி தமது அமைச்சுக்களின் மூலமோ அல்லது உறுதியான அழுத்த நிலைப்பாட்டின் ஊடாகவோ மலையக மக்களுக்கு எதையும் செய்யத் தயாராக இல்லை. அதைப்பற்றி அவர்கள் கவலைப்படவோ தமது வாக்கு வங்கிக்கு ஆபத்து வந்துவிடுமோ என்று அஞ்சவும் இல்லை. காரணம் அடுத்து 50 வருடங்களுக்காவது மலையகத்தமிழ் மக்களை ஏமாற்றக் கூடிய வல்லமை தம்மிடம் இருக்கிறது என நம்புவதேயாகும்.

அவர்களது நம்பிக்கைக்கு உகந்தவாறு மக்களும் தொழிலாளர்களும் ஆதிக்க– அடிமைச் சிந்தனைக்கு ஆட்பட்டவர்களாக இருந்தும் வருகிறார்கள். அரசியல் வழிப்புணர்வுக்கோ ஏமாற்றுக்களை எதிர்த்து நிற்கும் தைரியத்திற்கோ வாமுடியாத ஒரு பின்தங்கிய நிலை மலையகத்தில் நிலவுகின்றமை யதார்த்தமாக உள்ளது. இதனை மேவிச் செல்வதற்கு கடுமையாகவே போராட வேண்டி இருப்பதை தொழிலாளி வர்க்க அரசியல் முன்னெடுப்பாளர்கள் உணர்கிறார்கள். ஆனால் அத்தகைய புரட்சிகர வெகுஜன அரசியல் பாதையை வழிமறித்து திசை திருப்புவதில் படித்த ஒரு சுயநலக் கூட்டம் தமது சுயஈடேற்றத்திற்காக ஆதிக்க அரசியல் தொழிற்சங்க தலைமைகளுக்கு அடிபணிந்து சேவகம் செய்து நிற்கிறது. மறுபுறத்தில் அரச சார்பற்ற நிறுவனங்கள் மலையக மக்களின் வறுமை கல்வி சுகாதாரமின்மை அறியாமை பண்பாட்டுப் பின்தங்கிய நிலைமைகளைத் தமக்கு சாதகமாகப் பயன்படுத்தி சீரழிவுகளை தமது பணப்புழக்கத்தின் மூலம் ஈடேற்றி வருகின்றன.

இத்தகைய மலையகச் சூழல் தொழிற்சங்க அரசியல் ஆதிக்க ஏமாற்றுத் தலைமைகளுக்கு நல்ல வசதியான சூழலை வழங்கி நிற்கின்றது. "நம்தலைவர், நம்ம தம்பி, நம்ம அண்ணன், எப்படிப் பேசினாரு, என்ன அறிக்கை கொடுத்தாரு. அவங்க அமைச்சர்களாக இருப்பது நமக்குப் பெருமை தானே" இவ்வாறான அடிமைச் சிந்தனை தொடர்ச்சியாக மலையக மக்கள் மத்தியில் புகுத்தப்பட்டு வளர்க்கப்பட்டு வந்துள்ள நிலை இன்றும் நீடிக்கின்றது.

இத்தகைய நிலைக்கு எதிரான மாற்று அரசியல் கருத்தும் செயல்பாடும் அவசியமாகும். வர்க்க இன சாதிய பெண் ஒடுக்குமுறைகள் மலையகத் தமிழ்த் தேசிய இனத்தின் மத்தியில் விரவிக் கிடக்கின்றன. அவற்றின் கொடூரங்களின் விளைவே பொருளாதார அரசியல் சமூக பண்பாட்டம்சங்களின் மிகப் பின்தங்கிய நிலையின் தொடர்ச்சியாகும். இவற்றை அரசியல் ரீதியில் மலையக மக்கள் மத்தியில் உணர்த்தப்படாத வரை அங்கு மக்கள் ஏமாற்றப்படவே செய்வார்கள். ஆதிக்க உயர் வர்க்கத்தலைமைகள் தமது ஏமாற்றைத் தொடரவே செய்வார்கள். ஐந்து அமைச்சுக்களன்றி பத்து அமைச்சர்கள் நியமனம் பெற்றாலும் அத்தகையோர் ஆளும் பேரினவாத ஒடுக்குமுறையார்களின் பணிவான அடிமை சேவகம் செய்பவர்களாகவே இருப்பர். எனவே மலையக மக்களின் விடுதலைக்காகப் போராடும் அர்ப்பணிப்பு மிக்க கொள்கையும் தலைமைத்துவமும் கொண்ட உறுதியான மாற்று சக்தி மலையகத்தில் கட்டி வளர்க்கப்படல் வேண்டும்.

-வெகுஜனன்-

## ஆளும் வர்க்கப் பிரதிநிதிகளுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள "சம்பளம்"

| | முன்னையது | உயர்த்தப்பட்டது (2006) | - (2007) |
|---|---|---|---|
| **ஜனாதிபதி** | ரூபா 25, 000/= | ரூபா 61,250/= | ரூபா **97,500/=** |
| **பிரதமர்** | ரூபா 34, 000/= | ரூபா 54,000/= | ரூபா **71, 500/=** |
| **சபாநாயகர்** | ரூபா 31, 800/= | ரூபா 50,900/= | ரூபா **68, 500/=** |
| **அமைச்சர்கள், அமைச்சரவையற்ற அமைச்சர்கள் எதிர்க்கட்சித் தலைவர்** | ரூபா 29, 815/= | ரூபா 47,400/= | ரூபா **65, 000/=** |
| **உப சபாநாயர் பிரதி அமைச்சர்கள் குழுக்களின் பிரதித்தலைவர்கள்** | ரூபா 28,750/= | ரூபா 46, 125/= | ரூபா **63, 500/=** |
| **சகல பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்** | ரூபா, 22. 100/= | ரூபா 38, 192/= | ரூபா **54, 285/=** |

மேற் குறித்த சம்பள உயர்வு இவ்வருட ஜனவரியில் இருந்து நிலுவையாக வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேற்குறித்த தொகையானது வாழ்க்கைப் படி என்ற பெயரில் பெறப்படும் "சம்பளம்" ஆகும். இது தவிர பதவி வழியான செலவீனங்களும் சலுகைகளும் வரி விலக்குகளும் உண்டு. மேலும் ஐந்துவருடங்கள் பாராளுமன்ற உறுப்பினர் பதவி வகித்தால் ஓய்வூதியமும் கிடைக்கப்பெறும். அரசாங்க தனியார் துறையினர் தோட்டத் தொழிலாளர்களுக்கு வாழ்க்கைச் செலவுக்கு ஏற்ற சம்பள உயர்வு வழங்க மறுத்து வரும் அரசாங்கமும் ஜனாதிபதியும் ஆளும் வர்க்கப் பிரதிநிகளுக்கு வாழக்கைப்படி என்ற பெயரில் கொழுத்த சம்பள உயர்வை வழங்கி உள்ளது. ஆளும் வர்க்கமாக உள்ளவர்கள் எதைச் செய்வார்கள் எதைச் செய்யமாட்டார்கள் என்பதற்கு இது ஒரு உதாரணம் மட்டுமேயாகும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# ஒரு வருட ஆட்சியும் மகிந்த சிந்தனைப் பிசுகும்



மஹிந்த ராஜபக்ஷ ஆட்சிக்கு வந்து ஆண்டு ஒன்று நிறைவாகிறது. சனாதிபதித் தேர்தல் முடிவு எந்தப் புது நம்பிக்கைக்கும் இடமளியாது என்று தேர்தலுக்கு முன்பே புதிய-ஜனநாயகக் கட்சி தெரிவித்தது. யாரே ஒருவர் தேர்தலில் வெற்றி பெறுவது தவிர்க்க இயலாதது. யார் பதவிக்கு வந்தாலும் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான தீர்வுக்கு வழி ஏற்படாது என்பதற்கான ஆதாரங்கள் போர் நிறுத்தமும் புரிந்துணர்வு உடன்படிக்கையும் பேச்சுவார்த்தைகளும் பயனளிக்காத விதத்திலிருந்தே தெளிவாகி விட்டன. அவ்வாறே பொருளாதார பிரச்சினைகளுக்கும் தீர்வு ஏற்படுத்தப்படவில்லை.

ஜே.வி.பியுடனும் ஹெல உறுமயவுடனும் உடன்பாடு செய்து கொண்ட ராஜபக்ஷ தன்னை ஆதரித்த சமாதான விரும்பிகள் கேட்க விருப்பமான சில கருத்துக்களையும் சொல்லித் தனது அவசரக் கோலத் தேர்தல் அறிக்கைக்கு "மஹிந்த சிந்தனை" என்று பெயரும் சூட்டினார். எனினும் அவரிடம் தேசிய இனப்பிரச்சனைக்கோ நாட்டின் பொருளாதாரச் சீரழிவிற்கோ தீர்வுக்கான வழி எதுவும் இருக்கவில்லை. தீரக்கிற நோக்கம் இருந்தது கூட ஐமிச்சமானது. போர் நிறுத்தம் இன்னமும் நடைமுறையிலிருக்கிறது என்று சொல்லிக் கொண்டே அரசபடைகளும் விடுதலைப்புலிகளும் முதலில் சிறு சிறு மோதல்களில் ஈடுபட்டனர். அரசாங்கப் படைகளின் துணையுடனும் தூண்டுதலுடனும் செயற்படும் ஆயுதக்குழுக்கள் விடுதலைப் புலிகளுடன் மோதினர். இந்த மோதல் தனி மனிதர்களின் படுகொலைகளாகவும் மிரட்டல்களாகவும் ஆட்கடத்தல்களாகவும் விரிவு பெற்றன.

அந்நிய நெருக்குவாரங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட முதலாவது ஜெனிவா பேச்சுவார்த்தையில் போர் நிறுத்தத்தை ஒழுங்காக நடைமுறைப்படுத்துவது பற்றி மட்டும் சிறிது உடன்பாடு காணப்பட்டது. எனினும் ஏற்கப்பட்ட விடயங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தத் தவறியது. மோதல்கள் மேலும் வலுக்கக் கூடிய சூழலில், ராணுவத் தளபதி சரத் ஃபொன்சேகா மீதான தற்கொலைத் தாக்குதல் முயற்சியை அடுத்து அரசாங்கம் சம்பூரிலும் பிற இடங்களிலும் நடத்திய குண்டு வீச்சு, மேற்கொண்டும் போர் நிறுத்தம் என்பது ஒரு கேலிக்கூத்து என்று உறுதிப் படுத்தியது.

அதன் பின்பு நடந்த ஒஸ்லோ பேச்சு வார்த்தைகள் பற்றி அரசாங்கம் பொறுப்பின்றியும் அக்கறையின்றியுமே நடந்து கொண்டது. ஒஸ்லோ பேச்சுவார்த்தைகளின் முறிவை அடுத்து நடந்த கெப்பித்தி கொல்லாவ கிளேமோர் தாக்குதலின் பின்பு, அரசாங்கம் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் வான்வழித் தாக்குல்களைத் தீவிரப்படுத்தியது. அதையடுத்து மாவிலாறு அணை நெருக்கடியும் வடக்கில் விடுதலைப் புலிகள் தொடங்கிய பதில் தாக்குதலும் குறிகிய காலத்தில் அரசாங்கத்திற்குச் சாதகமான திசையில் நிலைமைகளை நகர்த்தினாலும் ஒக்றோபரில் முகமாலையில் படையினருக்கு ஏற்பட்ட பேரிழப்பும் தம்புள்ளவில் கடற்படையினர் மீதான தற்கொலைத்தாக்குதலும் காலி துறைமுகத்தாக்குதலும் சற்று நிதானமான ஒரு அணுகுமுறைக்கு உதவியிருக்க வேண்டும். அப்படி நிகழவில்லை. மூடப்பட்ட ஏ9 பாதைத் திறப்பைக் காரணமாகக் கொண்டு இரண்டாவது ஜெனீவா

தொடர்ச்சி 7ம் பக்கம்

# கம்யூனிஸக் கொடியின் கீழ் !

எதிர் காலத்தில் மனித குலம் மாண்புடன் இன்புற்று வாழும் பொருட்டு கம்யூனிஸ்டுகள் தங்கள் உயிரையும் தியாகம் செய்கின்றார்கள். நாளை மலரும் புது உலகைக் காணும் பாக்யம் இல்லாதிருந்தும், உவப்புடன் தங்கள் இன்னுயிரை அர்ப்பணிக்கிறார்கள்.


"கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் தனி வார்ப்பு; தனித் தாதுக்களால் ஆக்கப்பட்டவர்கள்; உலகப் பாட்டாளி வர்க்கப்படையின் நேர் நிகரற்ற போர்த்தந்திரியான தோழர் லெனின் அணியில் அங்கத்தினர்கள். இந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்று சொல்லிக் கொள்வதைவிட, சிறந்த பெருமை எங்களுக்கு வெறெதுவும் இல்லை. தோழர் லெனினால் அமைக்கப்பெற்று, அவரது தலைமையில் இயங்கிய கட்சியில் உறுப்பினன் என்பதைவிட, சிறந்த பெருமை வேறொன்றும் இல்லை" இப்படித் தொடங்குகிறது லெனின் மறைந்த காலத்தில் கம்யூனிஸ்டுக் கட்சியின் பெயரால் தோழர் ஸ்டாலின் எடுத்த சபதம், ஆம், நாங்கள் தனி வார்ப்புத்தான். ஏனென்றால், நாங்கள் மக்கள்.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள வாழ்க்கையை நேசிக்கிறோம். எனவேதான் மகிழ்ச்சியும் நிறைவும் சுதந்திரமும் கூடிய இலட்சிய வாழ்வுக்கான பாதையை அமை க்கும் பொழுது, குறுக்கிடும் தடைகளைத் தகர்தெறிவதில் எங்கள் உயிரையும் தியாகம் செய்ய எந்நேரத்திலும் நாங்கள் தய ங்குவதில்லை. அடிமைத் தனம், சுரண்டல் என்னும் சங்கிலிகளால் பிணைக்கப் பெற்று, முழந்தாளிட்டு வாழ்தல் வாழ்க்கை ஆகாது. தாவரங்களைப் போல் வாழ்வது வாழ்க்கை அல்ல. அது மனிதன் என்ற பெயருக்கே அவமானமாகும். இந்த அவல வாழ்வில் ஒரு கம்யூனிஸ்டு ஒரு உண்மையான மனிதன் திருப்தி அடைய அவனுக்கு உரிமை இருக்கிறதா? சுரண்டலுக்கும் அடிமைத்தனத்திற்கும் அடி பணிய அவனுக்கு உரிமை இருக்கிறதா? இல்லை. ஒரு போதும் இல்லை. எனவே தான், கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் உண்மையான வாழ்வுக்காக நடைபெறும் போராட்டத்தில் எத்தகைய தியாகத்தையும் செய்யப் பின்வாங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள மனிதரை நேசிக்கிறோம், மனிதத் தன்மையுள்ள எதுவும் எங்களுக்குப் புறம்பானதல்ல. மிகச் சாதாரண மனித இன்பங்களின் மதிப்பையும் நாங்கள் அறிவோம். அவற்றிலும் நாங்கள் மகிழ்ச்சி காண முடியும். எனவேதான் மனிதர் உழைப்பை மனிதர் பறிக்கும் அராஜக அமைப்பின் கொடுமைகளிலிருந்து, அதாவது பயங்கரப் போரின் துன்ப துயரங்கள் வேலையில்லாத் திண்டாட்டம் ஆகிய கொடுமைகளிலிருந்து விடுவிக்கப் பட்டு மகிழ்ச்சியும் நிறைவும் ஆரோக்கியமும் சுதந்திரமும் உள்ள மனிதருக்கு இந்தப் பரந்த உலகில் ஒரு இடம் அளிப்ப தற்காக, எங்கள் சுகபோகங்களைத் தியாகம் செய்ய நாங்கள் ஒரு போதும் தயங்குவதில்லை. லாபம், லாபம் மீண்டும் லாபம்! இதையே குறிக்கோளாகக் கொண்ட ஒரு அமைப்பு, மக்களுக்கிடையே நேச உறவு நிலவுவதற்குப் பதிலாக பண உற வையே அடிப்படையாகக் கொண்ட ஒரு அமைப்பு மனிதரைக் காட்டிலும் பணத்திற்கே அதிக மதிப்பைத் தருகிற ஒரு அமைப்பு மனிதத் தன்மை அற்றதாகும். மனிதரை நேசிக்கிற ஒரு மனிதனுக்கு ஒரு கம்யூனிஸ்டுக்கு மக்களின் மனிதத்தன்மை பறிக்கப்படுகின்ற பொழுது சும்மா இருக்க உரிமை உண்டா? இல்லை. எனவே தான். நிறைவும் சுதந்திரமும் பண்பும் பொருந்திய மனிதருக்காகப் போராடுவதில் தங்கள் முழு வலிமையைப் பயன்படுத்தவோ, தியாகம் செய்யவோ கம்யூனிஸ்டுகள் பின் வாங்குவதில்லை.

கம்யூனிஸ்டுகளாகிய நாங்கள் எங்கள் நாட்டை நேசிக்கிறோம். ஏனென்றால் ஒரு நாடுகூட அடக்கி ஒடுக்கப்பட்டாலும் மனிதரின் ஆக்க சக்திகள் அனைத்தும் சுயேச்சையாக வளர்ச்சி அடையமுடியாது. இறுதியான சமாதானத்திற்கு உத்த ரவாதம் இருக்காது. ஒரு நாடு மற்றொரு நாட்டை அடக்கி ஆண்டால் உண்மையான சுதந்திரம் இருக்க முடியாது. நமது மாபெரும் இலட்சியங்களை நாட்டின் ஜீவித அமைப்புக்குள் ளேயே அடைய விரும்புகிறேமே தவிர அதற்கு அப்பாற்பட்ட ல்ல. இல்லாவிட்டால் அவை எதார்த்தமாக முடியாது. உண்மை யான புதல்வர்களின் நேசத்தோடு நாங்கள் தாய்நாட்டை நேசிக்கிறோம். எனவே தான் மனிதகுல மேண்மைக்காகவும் வளர்ச்சிக்காகவும் எங்கள் நாடு வழங்கிய இன்றும் வழங்குகிற எல்லாக் காரியங்களுக்காகவும் அதனால் அதன் மேண்மைக்கும் வளர்ச்சிக்கும் உதவியாகவுள்ள அனைத்திற்காகவும் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். எங்கள் நாட்டை இழிவுபடுத்துகிற கொள்ளையிட விரும்புகிற அதன் இரத்தத்தை உறிஞ்சுகிற அதைப் பலவீனப்படுத்துகிற அனைத்தையும் நாங்கள் அழித் துவிட விரும்புகிறோம். எனவே தான் உலகில் சுதந்திரம் பெற்ற சமத்துவ நாடுகளின் மத்தியில் சம அந்தஸ்தோடு சுயேச்சையாக வாழும் பொருட்டு எங்கள் நாட்டின் பரிபூரண விடுதலைக்கான போராட்டத்தில் எங்கள் முழு வலிமையை ஈடுபடுத்தவோ சர்வபரித்தியாகம் செய்யவோ நாங்கள் தயங்குவதில்லை.

நாங்கள் நிறைவேற்ற வேண்டிய வேலைகள் மகத்தானவை. மகிமை வாய்ந்த உலகப் பாட்டாளி வர்க்க போர்த்தந்திர நிபுணரின் பட்டாளத்தை. தோழர் லெனின் பட்டாளத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் இப்பொறுப்புக்களை நிறைவேற்ற நாங்கள் கடமைப்பட்டிருக்கிறோம். இந்த பட்டாளத்தின் ஒற்றுமையையும் தூய்மையையும், கம்யூனிஸ்டுக் கட்சியின் ஒற்றுமையையும் புனிதத்தன்மையையும், கண்ணின் கருமணியைப்போன்று பாதுகாப்பது; மனிதகுலத்தில் சிறந்தவர்களையும்; நாட்டின் சிறந்த சக்திகளையும் மேலும் மேலும் ஒன்று திரட்டுவது; எங்கள் கூட்டாளிகளின் எண்ணிக்கையை மேலும் மேலும் அதிகரிப்பது; வரலாற்றின் வளர்ச்சி எதை நோக்கிச் செல்கிறது? தங்களின் ஜீவாதார நலன்களுக்காக அது மக்களிடம் வேண்டி நிற்பது என்ன? என்பவற்றை அவர்களுக்கு இடைவிடாது உணர்த்தி மக்களுடன் ஒன்று கலந்து சலிப்பின்றி பொறுமையோடு அவர்களுக்கு வழி காட்டுவது; அதாவது, உண்மையான உணர்வு, தைரியம் கருத்தில் உறுதி. தியாகம், சஞ்சலம் இன்மை ஆகிய சிறந்த மனிதப் பண்புகளுக்கு இருப்பிடமாக விளங்குவது; இவையே நாம் நிறைவேற்ற வேண்டிய கடமைகளாகும்."



தோழர் கே. ஏ. சுப்பிரமணியம் இலங்கையின் பொதுவுடைமை இயக்க முன்னோடிகளில் ஒருவர். தன்னுடைய சிந்தனையாலும் வாழ்வாலும் பொதுவுடைமை இலட்சியத்திற்கு முன்னுதாரணம் காட்டிச் சென்றவர்களில் முக்கியமானவர். பொதுவுடைமைவாதிகளின் நெஞ்சுரம் அர்ப்பணிப்பு வீரம் தியாகம் இலட்சிய தாகம் எளிமையான வாழ்வு கடும் உழைப்பு போன்றனவற்றுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர். உலகப் பொதுவுடைமைவாத முன்னோடிகள் விட்டுச் சென்ற சிந்தனைச் செல்வத்தைப் பேணிப்பாதுகாத்து புதிய தலைமுறையினர் உள்வாங்கி முன்னெடுப்பதை வலியுறுத்தி வந்தவர் தோழர் மணியம். அவரது விருப்பத்திற்குரியவர்களில் ஒருவரான ஜுலியஸ் ஃபியூசிக் செக்கோஷ்லேவேக்கியாவின் பொதுவுடைமைக் கட்சியின் தலைவர்களில் ஒருவர் ஹிட்லரின் கொடூரச் நாஜிச் சிறையின் சித்திரவதைகளுக்கு ஆளாகி வீரம் செறிந்த பொதுவுடைமை வாதியாக நின்று கொல்லப்பட்ட வீரபுருஷர். அவரது கட்டுரை ஒன் றின் முக்கிய பகுதிகளை சுருக்கி தோழர் மணியத் தின் 17வது ஆண்டு நினைவாக வெளியிடுகின் றோம். (ஆ-ர்)

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# சமூகமும் பண்பாடும் 7

பேராசிரியர் சி.சிவசேகரம்

## மனித உறவும் சொற்பிரயோகமும்

நிலவுடைமைச் சமுதாயத்தின் சமூக ஏற்றத்தாழ்வுகள் மொழியில் வெளிப்படுகிற அளவுக்கு அதற்கு முந்திய அடிமைச் சமுதாயத்திலோ அதற்குப் பிந்திய முதலாளியச் சமுதாயத் திலோ வெளிப்படவில்லை என்றே நினைக்கிறேன். மொழி வளர்ச்சி சிக்கலானதும் ஏற்றத்தாழ்வானதுமான ஒரு சமூகச் சூழலில் நிகழும் போது சமூக உறவுகளின் ஏற்றத்தாழ்வுகளின் நுட்பமான வேறுபாடுகளை மொழியும் அடையாளப்படுத்த வேண்டி ஏற்படுகிறது. தன்மை (நான், நாம், நாங்கள் ஆகியன) முன்னிலை (நீ, நீர், நீவிர், நீங்கள், தாங்கள்) படர்க்கை (அவன், அவர், அன்னார், அவர்கள்) ஆகியவற்றில் ஒருமை பன்மை வேறுபாடுகள் உயர்வு தாழ்வைச் சுட்டுகின்றன. அதற்கும் அப்பால், இவ்வாறான பேர்ச் சொற்களைத் தவிர்த்தாலும் பேசுகிறவர் தரப்பில் மிகுதியான பணிவைச் சுட்டுகிற விதமாக வரும் அடியேன், தமியேன், தேவரீர், ஐயன்மீர் ஆகியனவும் அடைமொழிகளாக வரும் மதிப்பிற்குரிய, வணக்கத்துக்குரிய, கனந்தங்கிய என்பனவும் நிலவுடைமைச் சமூகங்களில் ஒவ்வொரு வகையான சமூக உறவுக்கும் சூழலுக்கும் ஏற்றபடி வேறுபட்டிருந்ததை நாம் அறிவோம்.

அதைவிட வினைச் சொற்களில் குறிப்பாக ஏவல்களில், ஏற்றத்தாழ்வுகள் மேலும் வலியுறுத்தப்படுகின்றன. வாடா, வா, வாரும், வாங்கள், வாருங்கள், வந்தருளுக, வந்தருளுமின் என்பன இன்னும் தொடருகிற சில உதாரணங்கள்.

மேற்குறிப்பிட்டவற்றுள் ஒருமைச் சொற்களான நீ, அவன், அவள், வா, வந்தான், வந்தாள், போன்றவை தொடக்கக் காலத்தில் எந்த விதமான ஏற்றத்தாழ்வையும் அடையாளப்படுத்தியதாகக் கூற இயலாது. எனினும் சமூக ஏற்றத்தாழ்வுகள் மட்டுமன்றிக் குடும்ப அமைப்பிற்குட்பட்டதாலும் வயதும் சார்ந்தமை அதிகார அடுக்கும் உயர்ந்தோரைப் பன்மையிலும் தாழ்ந்தோரை ஒருமையிலும் அழைக்கும் தேவையை ஏற்படுத்துகின்றன.

படி முறையாக வகுக்கப்பட்ட அதிகார வரிசையில் மனிதர் வைக்கப்படுகிற போது வெவ்வேறு மட்டங்களில் உள்ளோர் ஒருவரை ஒருவர் எவ்வாறு விளிப்பது என்பது பற்றிய விதிகள் திட்டவட்டமாக வரையறுக்கப்படுகின்றன. அவ் விதிகளை மீறுவது அவமரியாதையாகவோ தகாத நடத்தையாகவோ கருதப்படுகிறது.

நிலவுடைமைச் சமுதாயத்தின் நெகிழ்வும் சீர்குலைவும் அதிகார அடுக்குகளில் மேல்கீழான மாற்றங்களை உண்டாக்குகின்றன. அதன் விளைவாக உறவுகளிலும் உறவுகளைச் சுட்டும் சொற்களிலும் மாற்றங்கள் ஏற்படுகின்றன. எவ்வாறாயினும் நிலவுடைமைச் சிந்தனையின் ஆதிக்கம் தொடருகிற அளவிற்கு ஒருவரை விளிக்கவும் ஏவவும் (அல்லது வேண்டவும்) பயன்படுகிற சொற்களில் ஏற்றத்தாழ்வு தொடருகிறது.

ஒரு பெண் தனது கணவனை ஒருமையில் மட்டுமன்றிப் பேர் சொல்லியும் அழைக்கவோ குறிப்பிடவோ கூடாது என்ற நிலை பல காலமாக இருந்து வந்துள்ளது. அது இன்னமும் பல இடங்களில் ஏதோ ஒரு வகையில் நடைமுறையில் உள்ளது. பழைய நாடகங்களிலும் சினிமாவிலும் மனைவி கணவனைப் பிராணநாதா, சுவாமி என்று விளிப்பதைக் கேட்டிருப்போம். இன்று அது மாறி அவர், அப்பா என் கிறவிதமாக வழக்கில் உள்ளன. நவீனமாதலின் விளைவாக கணவனைப் பேர் சொல்லிக் குறிப்பிடுவது இன்று பரவலாகியுள்ள போதும் பொதுஇடங்களிற் பேர் சொல்லி அழைப்பது இன்னமும் அதிகம் பரவலாகவில்லை. அப்பா, நீங்கள் என்பன போக, யாழ்ப்பாண வழக்கில் "இஞ்சாருங்கோ" போல தமிழகத்தில் "ஏங்க" "இன்னாங்க" போன்ற வடிவங்களை அறிவோம். பெண்கள் பொதுவாகவே ஒருமையிலும். "இஞ்சாரும்" "இஞ்சா" "ஏய்" "ஏண்டி" "எடியே", "இன்னாடி" என்றவாறு சமூகங்கட்கு ஏற்ப வேறுபட விளிக்கப்படுவதைக் கேட்டிருக்கிறோம். இவை தெட்டத்தெளிவாகவே குடும்பத்திற்குரிய அதிகார அடுக்குத் தொடர்பானது.

குழந்தைகள் தாய்மாரை நீ என்று அழைத்தாலும் தந்தையரைப் பன்மையிலேயே அழைப்பது வழக்கமாயிருந்துள்ளது. குழந்தைகளையும் வயதிற் குறைந்தோரையும் ஒருமையிலும் வயதில் மூத்தோரைப் பன்மையில் விளிப்பது இன்னமும் வழக்கிலிருந்தாலும் இலங்கையில் குழந்தைகள் உட்பட எல்லாரையும் பன்மையில் "நீங்கள்" என விளிக்கும் பழக்கம் பரவலாகி வந்துள்ளது. ஒருமை மிக நெருங்கிய நட்பு உள்ள இடத்திலோ அதிகாரம் உட்பட்டு மிகுதியான உரிமை உள்ள இடத்திலோ பயன்படுகிறது. கடவுளரைப் பாலவேறுபாடின்றி ஒருமையிலேயே விளிக்கிறோம். தமிழகத்தில் எவரையும் ஒருமையில் விளிப்பது இன்று பரவலாகவே வழக்கில் உள்ளது. எனினும் மரியாதை அவசியம் என்று கருதப்படும் இடங்களில் குறிப்பாக அதிகார நிலையில் உள்ளவர்களுடன் உரையாடுகிற போது பன்மையிலே விளிப்பது அவசியமாகிறது.

ஏற்றத்தாழ்வுகள் பால், சாதி, வர்க்கம், வயது ஆகிய அடிப்படைகளில் இருந்தாலும், சாதியம் வலுவாக உள்ள சூழல்களில் சாதி ஏற்றத்தாழ்வு பால், வயது வேறுபாடுகளை மேவி நிற்கிறது. சாதியில் தாழ்ந்த நிலையில் வைக்கப்பட்ட ஒருவர் வர்க்கத்தால் உயர்நிலை எய்துகிற போது சாதி வர்க்க அதிகார அடுக்குக்கள் முரண்படுவதால் சில சிக்கல்கள் நேருகின்றன. எனினும் சாதியாலும் வர்க்கத்தாலும் வேறுபட்ட இருவரிடையிலான உரையாடலில் ஏற்றத்தாழ்வை அடையாளங்காட்டாத விதமாக விளிப்பது நவீனச் சூழலில் பலவேறு விதங்களில் இயலுமாகியது. எனினும் சாதியச் சூழலுக்கும் சிந்தனைக்கும் அதிகம் பழக்கப்பட்டவர்கட்கு அவ்வாறு விடுபடுவது எளிதல்ல.

ஒரு அரசாங்க உயர் அதிகாரி சாதியால் உயர்ந்தவராக இருக்கும் போது அவரை "ஐயா" என்றோ "சேர்" என்றோ விளிப்பதில் எதுவிதமான தயக்கமும் இல்லாத ஒருவர் தன்னிலும் தாழ்ந்த சாதி எனத் தான் கருதும் உயர் அதிகாரியை அவ்வாறு அழைப்பதை எவ்வாறோ தவிர்க்கக் முயல்வதைக்

தொடர்ச்சி 8ம் பக்கம்

---

6ம் பக்க தொடர்ச்சி

## ஒரு வருட ஆட்சி

தேசபக்தன்

பேச்சுவார்த்தையும் முடங்கியது. ஜே. வி. பி, ஹெல உறுமய நெருக்கு வாரங்களாலேயே அரசாங்கம் அமைதிக்கான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பதை விட ஜே. வி. பியையும் ஹெல உறுமயவையும் ராஜபக்ஷ ஒரு வசதி யான சாட்டாகப் பயன்படுத்தினார் என்றே கூறுவேன்.

அரசாங்கம் தமிழ் மக்களைத் துன்புறுத்தி விடுதலைப் புலிகள் மீது நெருக்குவாரங்களைக் கொண்டுவர முயல்கிறது என்ற கருத்தை வலியுறுத்துவது போலவே யாழ்குடாநாட் டில் அத்தியாவசியப் பொருட்களி ன் பற்றாக்குறையின் நடுவே ஏ9 பாதையைத் திறக்க மறுப்பதும் விடுதலைப்புலிகளை இலக்கு வைப்பதாகக் கூறி அகதி முகாங்களையும் பாடசாலைகளையும் மக்கள் செறிவாக வாழும் இடங்களையும் தாக்கிப் பேரழிவை ஏற்படுத்துவதும் அமைந்துள்ளன.

விடுதலைப்புலிகள் மீதான ஐரோப்பியத் தடையின் பின்பு விடுதலைப்புலிகள் சர்வதேச அளவில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர் என்ற எண்ணமும் அரசாங்கத்தின் கடும் போக்குக்கு ஒரு காரணமாகி இருக்கலாம். எனினும் அண்மைய நிகழ்வுகளை நோக்கும் போது போர் நிறுத்த மீறல்கள் தொடர்பாகவோ தமிழ்ப் பொதுமக்கள் மீதான படையினரின் மனித உரிமை மீறல்கள் தொடர்ப்பாகவோ வடக்கு கிழக்கிலும் பின்பு கொழும்பிலும் நடக்கிற பணப்பறிப்பு, ஆட்கடத்தல்கள், மிரட்டல்கள், படுகொலைகள் போன்றவற்றில் அரசாங்கம் மெத்தனமாக இருப்பது அரசாங்கத்தின் தெரிவு என்பதை விட அரசாங்கத்தால் ஆயுதப்படைகளில் உள்ள தீய சக்திகளை மீறியோ ஆயுதப் படைகளுடன் சேர்ந்து செயற்படும் குற்றச் செயற்குழுக்களைக் கட்டுப்படுத்துகிற விதமாகவோ எதுவுஞ் செய்ய இயல வில்லை என்பதே பொருந்தும்.

நாட்டின் சட்டம் ஒழுங்கு என்பனவற்றின் சீர் குலைவுக்கு நீதித்துறையின் சீரழிவும் நீதித்துறை மீதான நேரடி அரசியற் குறுக்கீடும் மேலும் தூண்டுதலாக உள்ளன. யூ. என். பி யின் தேர்தல் தோல்வியால் விரக்தியடைந்த சிறிய பாராளுமன்ற அரசியற் கட்சிகளில் உள்ளவர்களை மட்டு மன்றி யூ. என். யினரையுங் கூட விலைக்கு வாங்குகிற அரசியல் வியாபாரம் இன்றைய பாராளுமன்ற அரசியலின் வங்குரோத்துத்தனத்தைத் தோலுரித்துக் காட்டுகிறது.

தன்னுடைய ஆட்சியை ஸ்திரப்படுத்துவதற்காக சனாதிபதி எடுத்துள்ள பல வேறு நடவடிக்கைகளில் தனது சகோதரர்களை அயல் நாடுகளிலிருந்து மீள வரவழைத்து உயர் பதவிகளில் அமர்த்தியதும் தனக்கு நெருக்கமான வர்களையும் வால்பிடிப்பவர்களையும் பலவேறு பொறுப்புக்களில் அமர்த்தியிருப்பதும் அடங்கும். எனினும் நாட்டின் பொருளாதாரமும் பாதுகாப்பும் இறைமையும் படுவேகமாகச் சரிகின்றன.

இன்று அரசாங்கத்தின் வலிமைக்கு ஒரு முக்கிய காரணம் யூ. என். பிக்குள் ஏற்பட்டுள்ள பிளவுகளும் அதனாலான குழப்பமான நிலைமையுமே. இச் சூழலில் ஏற்படுத்தப்பட்டுள்ள யூ. என்.பி- ஸ்ரீ.ல.சு.க புரிந்துணர்வுக்கு வெளிநாடுகளின் முக்கியமாக அமெரிக்காவின் வற்புறுத்தலும் ஒரு காரணம். ஆனால் யூஎன்.பி- ஸ்ரீ.ல.சு.க ஒத்துழைப்பு இன்னொரு விடயம். ரசாயனப் பசளை விலைக்குறைப்பை விட்டால் மக்களுக்கு நன்மையான எந்தவொரு தேர்தல் வாக்குறுதியையும் சனாதிபதியால் நிறைவேற்ற இயல வில்லை. பயங்கரமான வேகத்தில் ஏறுகிற விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதோ மோசமாகிவரும் பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதோ அரசாங்கத்தால் இயலாது. நாட்டின் பாதுகாப்பு நெருக்கடியும் தொடர்ச்சியான சட்டம் ஒழுங்கின் சீரழிவும். அந்நிய மூலதனத்தின் வருகையையும் சுற்றுலாப் பயணிகளின் வருகையையும் பெரிதும் பாதித்துள்ளன. உலகமயமாக்கலுக்கு உடன்பாடான திறந்த பொருளாதாரக் கொள்கையை அரசாங்கக் கட்டுப்பாடுகளின் தளர்த்தலும் ஒரு மாற்றுப் பொருளாதாரக் கொள்கையை உருவாக்குவதற்குத் தடையாக இருப்பதோடு கடந்த கால்நூற்றாண்டுக்குள் உருவாகி வளர்ந்து ள்ள ஒரு புதிய தரகு முதலாளி வர்க்கமும் "கறுப்புப் பொருளாதாரமும்" தேசிய பொருளாதார மீட்சிக்கு என்றும் தடையாகவும் மிரட்டலாகவும் இருக்கும். 1991க்குப் பின்பு பிரேமதாச ஆட்சி சிறிது பலவீனப்பட்ட நிலை யில் அதற்கெதிராக ஊர்வலம் நடத்தித் தன்னைப் பலப்படு த்திய மஹிந்த ராஜபக்ஷ மக்கள் அரசியல் வாதியல்ல. அவ ரது வர்க்கச் சார்பு உழைக்கும் மக்களின் நலன் சார்ந்தது மல்ல. யூ. என். பிக்கும் ஸ்ரீ. ல. சு. கட்சிக்கும் அடிப்படை வேறு பாடு காணமுடியாத இன்றைய அரசியற் சூழலில் காலஞ் சென்ற பிரேமதாசவுடன் ஒப்பிட்டால் ராஜபக்ஷவுக்கு அடி நிலை மக்களின் நலன் பற்றி உள்ள அக்கறை மிகக் குறை வாகவே தெரியும்.

பெரிய இடத்து அரசியல் பரம்பரை வழித்தலைமை என்பனவற்றுக்கு மாற்றான ஒரு தலைமையாகத் தன்னை விளம்பரப்படுத்திக் கொண்ட ராஜபக்ஷ இப்போது தனக்கு ஒரு பாரம்பரியமான தலைமைத் தகுதியை உருவாக்குகிற நோக்கில் தனது தகப்பனாரை ஒரு பெரிய தேசிய அரசியல் தலைவராகக் காட்டுகிற காரியங்களில் தீவிரமாக உள்ளார். அத்தோடு எந்த விதமான அரசியல் அக்கறையோ நாட்டுப் பற்றோ இல்லாமல் அமெரிக்கப் பிரஜைகளாகி அமெரிக்காவில் வாழ்ந்து வந்த சகோதாரர்களை வரவழைத்து பெரிய அரசியல் பொறுப்புக்களை வழங்கியிருக்கின்றார். தனது மகனையும் அரசியலில் நுழைக்கிறதற்கு அத்திவாரம் இட்டிருக்கிறார்.

பண்டாரநாயக்க குடும்பத்தின் அரசியல் ஆதிக்கம் பண்டாரநாயக்கவும் சிறிமா பண்டாரநாயக்கவும் அரசியல் நெருக்கடி மிக்க சூழலில் ஸ்ரீ. ல. சு. கட்சியை வெற்றிக்கு இட்டுச் சென்றதன் விளைவானது. யூ. என். பியின் குடும்ப ஆதிக்க அரசியலில் சேனநாயக்க ஜயவர்த்தன குடும்பங்களுக்கு நேரடி வாரிசுகள் இல்லாமல் போய்விட்டன. இன்று யூ. என். பியில் தலைமைக்கு வர பரம்பரைத் தகுதி மட்டும் போதாதளவுக்கு நிலைமைகள் சிறிது மாறியுள்ளன. இந்தப் பின்னணியில் நோக்கும் போது ராஜபக்ஷ தன்னைச் சூழ ஒரு ஆண்டபரம்பரை அடையாளத்தை உருவாக்குவது அவருடைய சிந்தனை நிலவுடைமை மேலாதிக்க சிந்தனையே ஒழிய மக்கள் அதிகாரம் பற்றியதல்ல என்று தெளிவாக்கும்.

நம் முன்னுள்ள. முக்கியமான கேள்வி ராஜபக்ஷ நல்லவரா கெட்டவரா யோக்கியரா அயோக்கியரா என்பதற்கப் பால் போகிறது. இன்று இந்த நாடு எதிர்நோக்குகிற எரிகிற பிரச்சனைகள் ஒருபுறம் அதை ஒரு ராணுவச் சர்வாதிகார ஆட்சியையோ ராணுவ ஆதிக்கத்திற்குட்பட்ட ஆட்சி முறையையோ நோக்கி வேகமாகத் தள்ளுகின்றன.

மறுபுறம் தேசிய இனப்பிரச்சினையின் விளைவான போர் இன்று ஏற்படுத்தியுள்ள மனித அவலத்தைக் காரணமாக்கி அந்நிய நாடுகள் குறுக்கிட்டு நாட்டைமேலும் சீரழிக்கும் அபாயமும் உருவாகி வருகிறது. மஹிந்த ராஜபக்ஷ தலைமையால் அவற்றினின்று நாட்டை விடுவிக்க முடியுமா என்பதே நம்முன்னுள்ள பெரிய கேள்வி. என்னால் நம்பிக்கையளிக்கக் கூடிய மறுமொழி ஒன்றையும் தர இயலவில்லை.

ஒரு அரசாங்கத்தால் தனது உறுப்புக்களில் எதையாவது கட்டுப்படுத்த இயலாது போய் அரசாங்கத்தை மீறி அந்த உறுப்புச் செயற்படுமாயின், "நாய் வாலை ஆட்டுவது முடிந்து வால் நாயை ஆட்டுகிறது" என்று கிண்டலாகச் சொல்வார்கள். இலங்கை இன்று எது நாய் எது வால் என்றே தெரியாத ஒரு நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது. இந்நிலையே மகிந்த ராஜபக்ஷ சனாதிபதவி ஏற்றதன் ஒரு வருடச் சாதனையாகக் காணப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# வலி- வடக்கு மண் மீளக்கிடைக்குமா? மனித உரிமைதானும் மீதமிருக்குமா?

● சிறீ

இலங்கையின் அரசியலமைப்பில் 4(ஈ) பிரிவ பின் வருமாறு கூறுகிறது.

அரசியமைப்பினால் வெளிப்படுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படுகின்ற அடிப்படை உரிமைகள், அரசாங்கத்தின் எல்லா உறுப்புக்களாலும் போற்றப்படவும் பேணப்படவும் ஏற்றமளிக்கப்படவும் வேண்டும் என்பதோடு அவை இதனகத்துப் பின்னர் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அத்தகைய முறையிற்றவிரவும் அத்தகைய அளவுக்குத் தவிரவும் சிறுகப்படுத் தவோ மட்டுப்படுத்தப்படுதவோ மறுக்கப்படவோ ஆகாது.

அடிப்படை உரிமைகள் என்ற தலைப்பின் கீழ்-ம் பெற்று வருகின்றன.

மேலும் ஐ.நா. வின் மனித உரிமைகள் தொடர்பாக விடுக்கப்பட்ட பிரகடனத்தில் 30 சரத்துக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. நமது நாட்டின் "ஜனநாயக அரசு" அவையனைத்தையும் மீறியே செயற்படுகின்றது. அதேவேளை இலங்கை அரசாங்கம் சர்வதேச மனித உரிமை உடன்படிக்கைகள் 17 ஐ ஏற்று அங்கீகரித்துள்ளதென்பதும் இங்கு கவ கவோ அல்லது ஏற்படுகளுக்கு அமைவாகவோ மேற்கொள்ளப்படவில்லை. இந்தப் பிரகடனம் சட்ட ரீதியற்றது என உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமைமீறல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அரசாங்கம் எந்தச் சட்ட ஏற்பாட்டின் கீழ் 'அதிஉயர் பாதுகாப்பு வலயப்பிரகடனம்' செய்தது என்பதை தெரியப்படுத்தத் தவறியுள்ளது. அந்த வழக்கு இன்னமும் நீதிமன்றத்தில் உள்ளது.



வடகிழக்கில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்கும் கொழும்பில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயங்களுக்கிடையே குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உண்டு. கொழும்பில் இராணுவ மையங்கள் ஜனாதிபதி மாளிகை மற்றும் காரி யாலயம்

11வது பிரிவு பின்வருமாறு கூறுகிறது:- "ஆள் எவரும் சித் திரவதைக்கு அல்லது கொடூர மான மனிதாபிமானமற்ற அல்லது இழி வான நடத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படுத்தப்படலா காது"

13 (1) பிரிவு பின்வருமாறுகூறுகிறது:-

"சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கிணங்கவன்றி ஆளெவரும் கைது செய்யப்படுதலாகாது. கைது செயயப்படுவதற்கான காரணம் கைது செய்யப்படும் எவரேனும் ஆளுக்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்"

மேற்கூறப்பட்டவாறு இலங்கையின் அரசியல் சட்டத்தில் அடிப்படை உரிமைகள் தொடர்பான ஏற்பாடுகள் உள்ளபோதும் தமிழ் முஸ்லீம் மலையகத் தேசிய இனத்தவர்களைப் பொறுத்த மட்டில் இந்த ஏற்பாடுகள் அனைத்தையுமே சட்டத்தையும் ஒழுங்கையும் பேணுவதற்காக அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டவர்கள் மீறியே வந்துள்ளனர். அரசியலமைப்பு ஜனநாயகம், மனித உரிமை என நீட்டி வாசிக்கின்ற அதே வேளை அவையாவும் மீறப்படுவதும் காலில் போட்டு மிதிக்கப்படுவதும் சர்வ சாதாரணமாகவே இடனிக்கப்பட வேண்டிய தொன்றாகும். மக்களை அவர்களது வாழ்விடங்களில் இருந்து பலவந்தமாக அகற்றி ராணுவத் தேவைக்காக அதி உயர்பாதுகாப்பு வலயங்களை உருவாக்கியது மிகப்பெரிய மனித உரிமை மீறலும் சர்வதேச சட்டத்திற்கு முரணானதுமாகும்.

இது மக்களின் வாழ்வதற்கான உரிமையை, சுதந்திரமாக நடமாடும் உரிமையை, வதிவிடத்தை தெரிவு செய்யும் உரிமையை அதி உயர்பாதுகாப்பு வலயம் மூலம் மீறப்பட்டுள்ளது.

மத சுதந்திரத்தை தேர்தலில் பங்கு பற்றும் உரிமையை சட்டத்தின் முன் எல்லோரும் சமன் என்பதையும் இந்த அதிஉயர் பாதுகாப்பு வலய ஏற்பாடு மீறுகிறது. இது வேலை செய்வதற்கான உரிமையை தமக்குரிய வாழ்க்கைத்தரத்தை சுகாதாரத்தை, கல்வியை பெறுவதற்கும் தடையாக அமைகிறது.

அதிஉயர் பாதுகாப்பு வலயம் என்பதே சட்ட ரீதியற்றது எனக் கொள்ளலாம். யாழ்மாவட்டத்தில் "அதிஉயர் பாதுகாப்பு வலயம்" எனப்பட்ட பிரகடனமானது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு அமைவா என்பனவும் அதி முக்கிய பிரமுகர்களின் காரியாலயங்கள் இல்லங்கள் என்பன வும் அதிஉயர் பாதுகாப்பிற்குரியன வென்று பயங்கரவாதத்திற்கு எதி ரான சட்டத்தின் 27வது பிரிவின் கீழ் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளன. ஆனால் வடக்கில் அமைந்துள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயங் கள் ஆயுதப்படையினரின் தீர்மான த்தின்படியே மேற்கொண்ட நடவடிக்கையாகும். இவற்றிற்கான எல்லைகள் திட்டவட்டமான வரைவற்றவை என்ப தோடு அவ்வப்போது மாற்றத்திற் குள்ளாகும் தன்மையும் உடையன.

கொழும்பில் உள்ள பாதுகாப்பு வலயத்திற்கும் வடகிழக்கில் உள்ள அதி உயர் பாதுகாப்பு வலயத்திற்குமிடையே உள்ள பிரத்தியேகமான வேறுபாடொன்று இங்கு குறிப்பிடத்தக்கது. கொழும்பில் பாதுகாப்பு வலயத்தில் உள்ள பிரஜைகளுக்கு வாழ்வதற்கான பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கப்படுகிறது. ஆனால் வடக்கில் பாதுகாப்பு வலயத்துள் மக்கள் வாழ்வதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் மக்கள் தங்களின் பொருளாதார நடவடிக்கை

தொடர்ச்சி 9 ம் பக்கம்

# ஒரு தமிழனுக்கு சிங்கள நண்பனின் கடிதம்

அன்பின் குணத்திற்கு

தற்போது என்னை மீண்டும் வேலைக்கு அமர்த்த வேண்டுமெனக் கேட்டு பொலிஸ் மா அதிபருக்கு மேன்முறையீட்டுக் கடிதம் ஒன்றை எழுதுவதற்காக ஓடித்திரிந்து களைத்துப்போன நிலைமையில் இக்கடிதத்தை எழுதுகிறேன்.

தமிழர்கள் வடக்கு கிழக்கிற்கு வெளியே தமிழ்மொழியை பாவிக்க முடியவில்லை என்று கவலை கொள்கிறார்கள். 1956 ஆம் ஆண்டு தனிச்சிங்களச் சட்டம் கொண்டு வரப்பட்டதன் விளைவாக சிங்கள மொழி வளர்ச்சியடைந்துள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. அந்த வளர்ச்சி தமிழ் மொழி க்கு மறுக்கப்பட்டுள்ளது என்பதையும் நான் மறுக்கவில்லை. இலங்கையில் இருக்கும் இரண்டு மொழிகளில் ஒன்றுக்கு சிறப்பான அந்தஸ்தை கொடுத்தது தொடக்கம் இன்றுவரை உனது சமூகத்திற்கும் எனது சமூகத்திற்கு மிடையிலான தொடர்பு முற்றாகவே சேதமடைந்துள்ளது.

நான் சிங்கள மொழியிலேயே க.பொ.த உயர்தரம் வரை படித்து சித்தியடைந்த சிங்களவன். பொலிஸ் சேவையிலேயே எனக்கு தொழில்வாய்ப்பு கிடைத்தது. அங்கும் சிங்களமொழியிலேயே எனது கடமைகளைச் செய்தேன். கொழும்பிலும் வவுனியாவிலும் நுவரெலியாவிலும் கடமையாற்றும் போது தமிழர்களிடம் கூட நான் சிங்கள மொழியிலேயே எனது கருமங்களை செய்தேன். அவர்களும் சிங்கள மொழியிலேயே கருமங்களை செய்துகொள்ள வேண்டுமென நினைத்தேன்.

சிங்களவர்கள் சிங்களத்தை மட்டும் படித்தால் எதனையும் செய்யலாம். ஆனால் தமிழர்கள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளையும் படிக்க வேண்டிய நிர்பந்தத்திற்குள் இருப்பதாக நீ அடிக்கடி குத்திக் காட்டியது எனக்கு இப்போது நினைவிற்கு வருகிறது. மொழிப் பிரச்சினையால் நீயும் உங்கள் சமூகமும் பட்ட வேதனை அளவிற்கு இல்லா விட்டாலும் கடந்த இரண்டு மூன்று நாட்களில் சிங்களம் மட்டுமே தெரிந்த நான் நன்கு வேதனையை அனுபவித்தேன். இது சிங்கள நாடு. இந்நாட்டின்மொழி சிங்களம். தமிழரான நீ சிங்களத்தை படித்தால் என்னவென்று நான் யோசித்துக் கொள்வதுண்டு.

இது சிங்கள நாடு என்று சொல்லப்படுகிறது. சிங்களமே ஆட்சிமொழி என்றும் சொல்லப்படுகிறது. ஆனால் சிங்களத்தை மட்டுமே தெரிந்து வைத்திருக்கும் எனக்கு சிங்களம் எமது ஆட்சி மொழி அல்ல என்பது இப்போது தான் தெரியவந்துள்ளது.

நான் மருதானை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிய போது ஹெரோ யின் போதைவஸ்து வியாபாரம் செய்யும் ஒரு கும்பலை கைதுசெய்யச் சென்றபோது துப்பாக்கியால் சுட்டதால் ஒருவர் மரணமடைந்தார். அதனால் நான் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டேன். அதுபற்றிய விசாரணைகள் முடிவடைந்துவிட்டன.

அதன்படி எனக்கு எதிராக சாட்சியங்கள் குறைவு. நான் கடந்த இரண்டு வருடங்களாக வேலை இல்லாமல் சம்பளமில்லாமல் இருக்கிறேன். எனது மாதாந்த சம்பளத்தை நம்பி அப்பா, அம்மா, படித்துக்கொண்டிருக்கும் சகோதரர்கள் இருவர், சகோதரிகள் இருவர் எனது மனைவி ஆகியோர் இருக்கின்றனர். கடந்த இரண்டுவருடமாகப்படாதபாடு பட்டுவிட்டேன். எனக்கு எதிராக சாட்சியங்கள் போதிய அளவு இல்லாததால் மேன்முறையீடு செய்தால் எனக்கு மீண்டும் வேலை வழங்கப்படலாம் என்று எனது திணைக்கள மேலதிகாரி ஒருவர் சொன்னார். அதன்படி நான் மேன்முறையீட்டை எனது தாய்மொழியான இலங்கையின் ஆட்சி மொழியான சிங்களத்தில் எழுதி கொடுத்தேன். ஆனால் அம்மேன்முறையீட்டுக் கடிதத்தை ஆங்கில மொழியில் எழுதித் தரும்படி பணிக் கப்பட்டேன். எனக்கு ஆங்கிலம் தெரியாது. எனது சக உத்தியோகத்தர்கள், சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கும் ஆங்கிலம் தெரியாது. அதனால் அலைந்து திரிந்து ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியொருவரை அணுகினேன்.

அவர் திட்டித் தீர்த்துவிட்டு ஆங்கிலத்தில் மேன் முறையீட்டை எழுதித் தந்தார். ஆட்சிமொழி சிங்களம் என்பது உண்மை என்றால் ஆங்கில மொழியில் மேன் முறையீட்டுக் கடிதத்தை ஏன் எழுத வேண்டும் என்று திட்டினார். நான் ஆங்கில மொழியை படிக்கவில்லை என்பதற்காக என்னையும் திட்டினார்.

நேற்றுத் தான் அக்கடிதத்தை பதிவு அஞ்சல் செய்தேன். நேற்றிரவு எனக்கு நித்திரை இல்லை. உன்னை ஆள்வது சிங்களம் என்பது உண்மை. என்னை ஆள்வது சிங்களம் போல் தெரிந்தாலும் உண்மை அதுவல்ல. சிங்களம் ஆட்சிமொழியாகி 50 ஆண்டுகளாகியும் எனது வாழ்விற்கான தலைவிதியை இன்னும் ஆங்கிலமே தீர்மானிக்கிறது. இறுதியில் உனது தலைவிதியையும் ஆங்கிலமே தீர்மானிப்பதாய் இருக்கிறதை நீ அறிய வாய்ப்பில்லை.

தொடர்ச்சி 9ம் பக்கம்

## மனித உறவு

7ம் பக்க தொடர்ச்சி

காணலாம். சிலர் தாங்கள் சந்திக்கும் அதிகாரி தனக்குச் சமமான அல்லது உயர்ந்த சாதியைச் சேராதவராக இருக்கக் கூடுமானால் வேற்று இனத்தவரான ஒரு அதிகாரியைச் சந்திப்பதற்கு முயற்சி எடுப்பதைக் கண்டிருப்போம்.

எவ்வாறாயினும், இன்று, நவீனமயமாதலின் விளைவாகவும் சாதியத்திற்கெதிரான பலவேறு போராட்டங்களின் விளைவாகவும் வெளிவெளியாகச் சாதி வேறுபாடு காட்டுவது ஏற்க இயலாத சமூக நடத்தையாகியுள்ளது. அதேவேளை சமூக அந்தஸ்து, தொழில் உயர்தாழ்வு, எசமான்- ஊழியன் உறவு என வருகிற போது ஒருமை- பன்மையிலும் ஒருவரைத் தாழ்த்தியும் விளிப்பது வழக்கிலுள்ளது.

இது மேலை நாடுகளில் உள்ள நிலைமைகளிலிருந்து மிகவும் வேறுபட்டது. சென்ற நூற்றாண்டின் தொடக்கம் முதலாக குறிப்பாக ரஷ்யப்புரட்சிக்குப் பிற்பட்டுத் தொழிலாளி வர்க்கம் தனது உரிமையையும் சுயமரியாதையையும் மிகவும் வற்புறுத்தி வந்துள்ளது. ஏற்கெனவே முதலாளிய வளர்ச்சி நிலவுடைமை உறவுகளைத் தகர்த்துவிட்ட சூழ்நிலையில் மனிதரிடையிலான உரையாடல்களில் உயர்வு தாழ்வை வெளிவெளியாகச் சுட்டிக் காட்டுகிற விதமான விளிப்பு முறைகள் பெரிதும் இல்லாமறபோய் விட்டன. ஒரு கூட்டத்தின் போது அவைத் தலைவரை அவையிலிருந்து விளிக்கையிலோ பாடசாலை ஆசிரியரை மாணவர் விளிக்கும் போதோ ஐயா (சேர்) என விளிப்பது பண்பானது எனக் கருதப்படாலும் உயர்வகுப்பு மாணவர்கள் ஆசிரியரை திருவாளர் இன்னார் என்று விளிப்பதும் பல்கலைக்கழகத்தில் சமத்துவமான முறையில் பேர் சொல்லி அழைப்பதும் வழக்காகி விட்டது. பதவிப் பேர்களை அவை கட்டாயம் சொல்லப்பட வேண்டிய இடங்கள் தவிர்ந்து பெரும்பாலானோர் பாவிப்பதில்லை. இங்கே ஒவ்வொருவர் தனது பட்டங்களின் பேரை அகப்பட்ட தருணங்களில் எல்லாம் பேருக்கு முன்னால் இட்டுக் கொள்ளுவது ஒரு அரை நிலவுடைமை அரைக் கொலனிய காலச் சிந்தனையின் தொடர்ச்சி என்றே சொல்ல வேண்டும்.

சில சமூகச் சூழல்களில் குறிப்பாக விளிம்பு நிலைச் சமூகப்பிரிவினரிடையிலும் பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய உழைக்கும் சமூகங்களுள்ளும் பால் வயது வேறுபாடின்றி எல்லாரும் எல்லாரையும் ஒருமையில் விளிப்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். பல சமயம் தம்மை விட உயர்ந்த சமூக நிலையில் உள்ளவர்களையும் அவர்கள் ஒருமையிலே விளிப்பதைக் காணலாம்.

சமுதாயத்தின் பிரதான நீரோட்டத்தினுள் முக்கியமான ஒரு விலக்கு, மிக நெருக்கமான உறவுள்ளவர்கள் ஒருவரை ஒருவர் விளிக்கும் முறை, நீ என்பதோ வா, வாடா, வாடி என்று விளிப்பதோ உயர்வு தாழ்வு கடந்த ஒரு நெருக்கத்தைக் குறிக்கும். எனினும் இது ஏற்கப்பட்ட சமூக நடத்தை என்ற வரையறைக்குள் வராது.

தொகுத்துச் சொல்வதாயின் மனித உறவின் ஏற்றத்தாழ்வை மொழியும் பிரதிபலிக்கிறது. நிலவுடைமைச சமூகத்தில் தெளிவாக வரையறுக்கப்பட்ட எல்லைக் கோடுகள் முதலாளியத்தின் வருகையோடு கரைந்து போகின்றன. எனினும் ஒரு சமூகம் முதலாளிய நவீனத்துவத்தை முழுமையாக உள்வாங்கும் வரை மொழியும் நிலவுடைமைச் சமூகத்தின் வேறுபாடுகளைத் திரிந்த வடிவிலும் வெவ்வேறு அளவுகளிலும் பேணும். முதலாளியம், தோற்றப்பாடான சமத்துவத்தை முக்கியமாகப் பிறப்பால் எல்லாரும் சமம், சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்கிற விதமான கருத்துக்களை ஏற்கிறது.

முதலாளிய சமூகத்தில் மனித உறவுகளிலான சமத்துவம் முதலாளிய சனநாயகத்தின் ஒருவருக்கு ஒரு வாக்கு என்கிற சமத்துவத்தை ஒத்தளவுக்கு மாயையானதே. எனினும் முதலாளியம் நிலவுடைமைச் சமூகத்தின் இறுக்கமான, வெளி வெளியாக அசமத்துவத்தைப் பேணுகிற விதிகளை உடைத்தெறிவது நமது சமூகம் போன்று நவீனத்துவத்திற்குள் நுழையவும் முதலாளிய பொருளாதார விருத்தியைக் கண்டடையத் திணறுகிற சமூகஙகளில் தேவையானதும் தவிர்க்க இயலாததுமாகும்.

இன்று இலங்கைத் தமிழரிடையில் ஒருவரை நீங்கள் என்று பன்மையில் விளிப்பது பண்பானதாகவும் நீர் என விளிப்பது ஏற்கத்தக்கதாகவும் உள்ளன. ஒருமையில் விளிப்பது அந்தரங்கமான சூழ்நிலைகளிலும் குறிப்பான தனிப்பட்ட அல்லது குழுக்கட்குட்பட்ட உறவுகளிலும் ஏற்புடையதாக உள்ளது. இது முற்போக்கான ஒரு திசைமாற்றம். ஆயினும் இது மனித சமத்துவத்தை முழுமையாக அடையாளப் படுத்துகிற மாற்றமாக அமைவதற்கு நீண்ட காலம் எடுக்கும். எனினும் நமது பண்பாடு மனித சமத்துவ த்தின் அடிப்படையிலானதாக அமைவதற்கு முன்னதாகவே அது சாத்தியப்படக்கூடும்.

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# அரசாங்கம் ஏவி நிற்கும் பட்டினி என்னும் கொலைக் கருவி

யாழ்பாணத்தில் இப்போது நிலவுகிற அத்தியாவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடும் அதன் விளைவான கட்டுப்பாடற்ற விலையேற்றமும் அதனால் பொருள் வசதி குறைந்த மக்கள் ஒரு வேளை உணவுக்கே அல்லாடுகிற நிலையும் பற்றி அரசாங்கம் மிகவும் அசட்டையாகவே நடந்து வந்துள்ளது. மனிதாபிமான நோக்கில் பண்டங்களைக் கப்பல் மூலம் அனுப்பி வைக்கப் போவதான அறிவிப்புக்கள் அரசாங்கத்தின் மனிதாபிமானத்தைப் பற்றி எதையுமே சொல்லவில்லை. மாறாகத் தனது கட்டுப்பாட்டில் உள்ள ஒரு பிரதேசத்தில் வாழுகிற ஆறுலட்சம் மக்களுக்கு வேண்டிய அத்தியாவசியப் பொருட்களை வழங்கவும் சரிவர விநியோகிக்கவும் தனக்கிருந்த கடமையைச் செய்யத் தவறி விட்டது என்பதை மூடிமறைக்கிற ஒரு முயற்சி யேயாகும். போராடுகிற ஒரு சமூகத்தை அடக்கி ஒடுக்குவதற்காகப் பட்டினியை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது உலகில் இது தான் முதல் முறையுமல்ல. இலங்கையில் யூ. என். பி ஆட்சியில் 1984- 87 காலகட்டத்தில் லலித் அத்துலக்முதலி பாதுகாப்பு அமைச்சராக இருந்த போது நடந்தவற்றை யாரும் மறந்திருக்க நியாயமில்லை. இப்போது விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு கிழக்குப் பகுதிகட்கு முக்கியமாக இடம்பெயந்தோர் அனேகர் வாழுகிற இடங்க ளில் வாழும் மக்களுக்கு உணவும் மருந்துப் பொருட்களும் போகாமல் தடுப்பதில் ராணுவத்தினர் மிகத் தீவிரமாக இருந்துள்ளனர். அரசாங்கத்தின் மனிதாபிமானம் பற்றி நமக்கு உணர்த்தக் கூடிய விதமான பல விடயங்கள் 2004 இறுதியில் சுனாமிக்குப் பிறகு நடந்துள்ளன. எனவேதான் வடக்கிற்கு உணவுப் பொருட்களை அனுப்புவதில் அரசாங்கத்திற்கு உள்ள அக்கறை பற்றி அதிகம் பேச வேண்டியதில்லை.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் அத்தியவசியப் பொருட்களுக்கான தட்டுப்பாடு ஏற்படுகிற அபாயம் பற்றி அரசாங்க அதிகாரிகள் முதலாகப் பலரும் ஏ- 9 பாதை மூடப்பட்ட சில வாரங்களின் பின்னிருந்தே எச்சரித்து வந்தனர். தட்டுப்பாடுகள் காரணமாக விலைகள் ஏறத் தொடங்கிய நிலையிற் கூட அரசாங்கம் ஏ- 9 பாதையைத் திறப்பது பற்றிய விவாதத்தில் தனது நிலைப்பாட்டை நியாயப்படுத்துவதிற் கவனங் காட்டியதே ஒழியக் குடா நாட்டு மக்களுக்கு வேண்டிய பொருட்கள் கிடைக்க வேண்டும் என்பது பற்றி எதுவிதமான கவலையுங் காட்டவில்லை.

மிக அண்மையில், யாழ்ப்பாணக் கத்தோலிக்கத் திருச்சபையின் பேராயர் யாழ்ப்பாணத்தில் நிலவுகிற உணவுத் தட்டுபாடு பற்றி மிகவும் வன்மையாக எச்சரித்து ஒரு அறிக்கை விடுகிற வரையும் யாழ்ப்பானத்தில் ஒரு விதமான தட்டுப்பாடும் இல்லை என்கிற விதமான பாசாங்குகள்தான் அரசாங்கத் தரப்பிற் காணப்பட்டன. சில அரசாங்கப் பேச்சாளர்களது அறிக்கைகள் மிகவும் வஞ்சகமானவையாயும் யாழ்ப்பாண மக்களைத் துன்புறுத்துவதில் இன்பம் காணுவது போலவுமே தென்படுகின்றன.

இன்று வடக்கில் நிலவுகிற தட்டுப்பாடுகள் பலவும் உடனடியாகத் தீரப் போகிறவையல்ல. அரசாங்கம் விடுதலைப்புலிகள் உரிமை கோரும் கடற்பகுதியில் தனது மேலாதிக்கத்தை நிறுவும் அல்லது தன் உரிமையை நிலைநாட்டும் நோக்கில் கடல் வழியே உணவுப் பொருட்களைக் கொண்டு செல்லுகிறதை வற்புறுத்தி வருகிறது. ஏ-9 பாதை க்குப் பதிலாக மாற்றுத் தரைப்பாதை பற்றிய ஆலோசனை கூட நியாயமான தீர்வை எட்டுவதைத் தவிர்க்கிற ஒரு முயற்சியாகவே காண வேண்டியுள்ளது.

யாழ் குடா நாட்டில் உள்ள பொருட் தட்டுப்பாட்டிற்கான அடிப்படைக் காரணம் திட்டமிட்ட அரசாங்க நடவடிக்கைகளது விளைவு என்பது முக்கியமான விடயம். எனினும் இந்த நெருக்கடி சாதாரண மக்களைப் பெருமளவிற் பாதிப்பதற்கு வேறு காரணங்களும் உள்ளன.

பதுக்கற் காரர்களும் கள்ளச் சந்தை வணிகர்களும் மக்களின் அவலத்தைப் பயன்படுத்திச் சுரண்டிக் கொழுப்பவர்கள். ஒவ்வொரு சமூக நெருக்கடியும் அவர்களுக்கு ஒரு புதிய வாய்ப்பு. அவர்களை எதிர்த்து மக்கள் தமது நலன்களைப் பேண கூட்டுறவு அமைப்புக்கள் போன்ற மக்கள் நிறுவனங்கள் மூலமும் மக்களின் பொதுநலனுக்கான சமூக அமைப்புக்கள் மூலமும் மக்கள் போராட இயலும்.



யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கம் கொள்ளைலாபம் அடிக்கிற பதுக்கல்காரர்கட்கும் கள்ளச் சந்தை வணிகர்கட்கும் எதிராக வறிய, நடுத்தர வர்க்க மக்களின் நலன்கட்கும் ஒருகாலத்தில் பெரும் பங்காற்றியதை நினைவு கூருவது நல்லது.

மக்களின் உணவைப் பறித்துக் கள்ளச் சந்தைக்காரர்களைக் கொழுக்கச் செய்வதில் அரசாங்கத்தின் பொறுப்பிற்குள் வரும் பண்டகசாலைகளும் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனங்களிலும் பொறுப்பில் உள்ளவர்களும் உடந்தையாக உள்ளனர். பதுக்கல் பற்றிய உண்மைகளை மக்கள் அறிந்தாலும் மக்களால் எதையுமே செய்ய இயலாத விதமாக அவர்கள் அதிகாரமற்றுள்ளனர். இந்த நிலைமை மாறப்பட வேண்டும். மக்கள் தமது அடிப்படை உரிமையான வாழும் உரிமைக்காக ஒரு போராட்டத்தில் அவர்கள் இறங்க வேண்டிய ஒரு சூழ்நிலையுண்டாகியுள்ளது.



இந்தப் பின்னணியிலேயே ராணுவம் நியாய விலைக் கடைகளைத் திறந்துள்ளது. இந்த நியாய விலைப் பொருட்கள் எங்கிருந்து வருகின்றன? ராணுவத்தினரின் தேவைக்கு வழங்கப்படுகிற பொருட்களில் அவர்களது பாவனைக்குக் கண்டு மேலதிகமான பொருட்களை அவர்கள் நியாய விலையில் சந்தைப்படுத்துகிறார்களென்றால், ராணுவத்தினரின் தேவைக்கும் மீறிய பொருட்கள் அவர்கட்கு வழங்கப்படுகின்றன என்பதும் அதே வேளை பொதுமக்களுக்கு வேண்டியதற்கும் மிகக் குறைவான அளவே வழங்கப்பட்டுள்ளது என்பதும் புலனாகிறது அல்லவா!

ராணுவ நியாய விலைக் கடைகளைத் திறப்பதன் மூலம், ராணுவத்திற்கும் அரசாங்கத்திற்கும் எதிராகப் பொதுமக்களிடையில் மூளக்கூடிய கோபத்தை ராணுவத்தினருக்கு நன்றி உணர்வாக மாற்றுகிற முயற்சி சிறிது வெற்றியளிக்கிறது. மக்கள் பட்டினியால் வாடுகிற போது உண்டு களித்து வாழுகிற உயர்மட்டப் படையினருக்கு எதிரான வெகுசன ஆர்ப்பாட்டங்கள் வெடித்தெழாமல் தவிர்க்க இந்த நியாயவிலைக் கடைகள் உதவுகின்றன. எனினும் அரசாங்கத்தின் பொறுப்பின்மைக்கும் திட்டமிட்ட புறக்கணிப்புக்கும் எதிராக மக்கள் போராட வேண்டிய தேவை இன்று தவிர்க்கக் கூடாதது. அதே வேளை சமூக விரோதச் சக்திகளான கள்ளச்சந்தை வியாபாரிகளையும் பதுற்கற்காரர்களையும் தோலுரித்துக் காட்டி மக்களிடமிருந்து பறிக்கவும் பதுக்கி ஒழிக்கவும் அநியாயவிலையில் விற்றுக் களவாடப் பட்டதுமான பொருட்களை மக்களுக்கு மீட்டுத் தருவதற்கான ஒரு வெகுசனப் போராட்டம் குடாநாடு தழுவிய முறையிலும் ஊர் மட்டத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இன்றைய பற்றாக்குறை மக்களைப் பலவீனப்படுத்தித் தரும நிறுவனங்களின் தயவில் அஞ்சி நடுங்கும் நாதியற்றவர்களாக்குவதை நாம் ஏற்போமாயின் விடுதலைக்குப் போராட்டத் திராணியற்ற ஒரு மக்கள் திரளே குடாநாட்டில் எஞ்சியிருக்கும்.

மாறாக, மக்கள் தமது அடிப்படை உரிமைகளான உணவு, உடை, உறைவிடம், மருத்துவம், போக்குவரத்து ஆகியவற்றைப் பெறுவதற்காக நடத்துகிற போராட்டங்கள் மக்களுக்கு அரசியல் அதிகாரத்தை வென்றெடுக்கும் நடைமுறைப் பாடங்களாக அமைவதோடு சுயமரியாதை உணர்வையும் வலுப்படுத்துவன. தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்கு இன்றியமையாத மனிதப் பண்புகளில் மனித சமத்துவ உணர்வும் மனிதருடைய சுயமரியாதையும் மிக முக்கியமானவை. தமிழ் மக்கள் மீது வலிந்து சுமத்தப்பட்டுள்ள இன்றைய பொருளாதார அவலம் தமிழ் மக்களை விடுதலை உணர் வற்ற அடிமைகளாகக் குறுக்கி ஒடுக்காமல் தடுப்பது தமிழ் மக்களின் விடுதலை பற்றி அக்கறை உள்ள அனைவருடை யதும் தவிர்க்க இயலாத பொறுப்பாகும்.

### யாழ்- குடாநாட்டின் அதிகரித்த விலைப்பட்டியல்

| | | ரூபா. சதம் |
|---|---|---|
| அரிசி | ஒரு கிலோ | - 175.00 |
| குத்தரசி | ,, | - 225.00 |
| கோதுமை மா | ,, | - 150.00 |
| சீனி | ,, | - 400.00 |
| பருப்பு | ,, | - 200.00 |
| தேங்காய் ஒன்று | | - 90.00 |
| தேயிலை ஒரு கிலோ | | - 800.00 |
| சிகப்பு மிளகாய் | ,, | - 500.00 |
| மல்லி | ,, | - 600.00 |
| புளி | ,, | - 160.00 |
| இஞ்சி | ,, | -2500.00 |
| வெள்ளை பூடு | ,, | -2000.00 |
| முட்டை ஒன்று | | - 40.00 |
| தீப்பெட்டி | | - 40.00 |
| பால்மாவகை (400கிராம்) | | - 450.00 |
| தே. எண்ணை 1லீற்றர் | | - 450.00 |
| மண்ணெண்ணை | 1 ,, | - 200.00 |
| டீசல் | 1 ,, | - 150.00 |
| பெற்றோல் | 1 ,, | - 600.00 |

-மோகன்-

---

பாதுகாப்பபு வலயம்

8ம் பக்க தொடர்ச்சி

யில் ஈடுபடுவதற்கும் தடைவிதிக்கப் பட்டுள்ளது.

யாழ் மாவட்டத்தில் 13 அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் உள்ளன. அது யாழ்ப்பாணத்தின் நிலப்பரப்பில் 30 வீதத்தை விழுங்கியுள்ளது. இதில் 42000 ஆயிரம் ஏக்கர் பயி ர்ச்செய்கைக்குரிய நிலமும் 30,000 ஆயிரம் வதிவிடங்களும் 293 வழிபாட்டுத்தலங்களையும் 100வரையான பாடசாலைகளையும் உள்ளடக்கி நிற்கின்றன. வடக்கில் உள்ள அதிஉயர்பாதுகாப்பு வலயங்களில் மிகப் பெரியதும் முதலாவதுமான வலிவடக்குப் பிரதேசம் 58. 3 ச.கி. மீட்டர் பரப்பளவாகும். இங்கேதான் செழிப்பான செம்மண் பயிர்ச் செய்கை நிலங்கள் உண்டு. இந்தப் பகுதியிலிருந்து மக்களை விரட்டும் பணி 1983ல் ஆரம்பிக்கப்பட்டு 1990 யூன் மாதமளவில் பூர்த்தியாக்கப்பட்டது. பதினாறு வருடங்கள் சென்றுவிட்டன.

எறிகணை வீச்சுக்கள் ஆட்டிலரித் தாக்குதல்கள் உல ங்குவானூர்தித் தாக்குதல்கள் மூலம் மக்கள் விரட்டி அடிக்கப்பட்டனர். அரசபயங்கரவாதம் மூலம் மக்கள் வெளியேற்றப்பட்டனர். மக்களை வெளியேற்றிய பின் இராணுவம் புல்டோசர்கள் மூலம் சகல இருப்பிடங்களையும் தரைமட்டமாக்கியது. தமது தேவைக்கு உகந்ததெனக் கருதப்பட்ட வீடுகளை மட்டுமே விட்டுவைத்தனர். மக்கள் வாழ்ந்த இடங்களில் பதுங்கு குழிகளையும் பாதுகாப்பு அரண்களையும் புதிய பாதைகளையும் ராணுவம் அமைத்து கொண்டது. வலிவடக்கில் உள்ள வீடுகளில் 75 வீதமானவை சீமெந்தால் கட்டப்பட்டிருந்தன. இந்துக் கோவில்களும் அழிக்கப்பட்டன. கோவில்களுக்குள் படையினரின் பயிற்சிகளும் இடம்பெறுகின்றன. பல இடங்களில் புத்தர் சிலைகளும் விகாரைகளும் நிறுவப்பட்டுள்ளன.

மேற்ப கூறியவற்றை உற்று நோக்கும் எவருக்கும் இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் எழுதப்பட்டவற்றின் போலித்தனத்தையும் ஏமாற்றுக்களையும் புரிந்து கொள்ளச் சிரமம் இருக்காது. முதலாளித்துவ அரசியலமைப்புகள் மக்களின் அடிப்படை உரிமைகளை வெறும் சொல்லாடல்கள் மூலமே முன்வைக்கின்றனவே அன்றி உண்மையான மக்களுக்குரிய அர்த்தத்தில் அல்ல என்பதே உண்மையாகும்.

---

ஒரு தமிழனின்

8ம் பக்க தொடர்ச்சி

ஏனெனில் உனது புலன்களுக்கு தெரிந்த அனுபவம் சிங்களம் உன்னை ஆள்வதாகவே இருக்கிறது.

கடந்த 50 வருடங்களாக மொழிப் பிரச்சினையால் தமிழர்கள் அனுபவித்து வரும் கஷ்டங்களையும் நேற்று எனக்கு ஏற்பட்ட அனுபவத்தையும் சமப்படுத்த முடியாது. கடந்த 50 வருடங்களாக சிங்கள மொழி நிறுவனமயப்படுத்தப்பட்டதாக கூறப்பட்டபோதும் அது உண்மை இல்லை என்றே தோன்றுகிறது. சிங்களப் பேரினவாதம் நிறுவனமயப் பட்டிருக்கலாம். உன்னை சிங்களம் ஆண்டாலும் இறுதியில் நம் இருவரையும் ஆங்கிலமே தீர்மானிக்கிறது என்பதே உண்மை. எனது மொழியில் எனது முறைப்பாட்டை சொல்ல முடியவில்லையே என்கிறபோதுதான் உனது உணர்வை என்னால் விளங்கிக்கொள்ள முடிகிறது. நீ உனது மொழியை பிரயோகிக்க முடியாதவனாய் இருப்பதினால் ஏற்படும் துன்பம் பற்றி விளங்கிக் கொள்ள முடிகிறது. பெரிய விவாதங்களை செய்வதற்காகவன்றி எனது மொழியை நான் பிரயோகிக்க முடியாதிருக்கின்றபோது ஏற்பட்டுள்ள எனது உணர்வினை பகிர்ந்து கொள்வதற்காகவே இக் கடிதத்தை எழுதினேன். நன்றி.

நண்பன்
உதெனி பந்துல

www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



# உலக அரங்கின் நாட்குறிப்பு

உலகோன்

## பயங்கரவாதத்தின் பெயரால்

அண்மையில் பாக்கிஸ்தானில் உள்ள இஸ்லாமியப் பாடசாலையின் மீது நடாத்தப்பட்ட ஏவுகணைத் தாக்குதலில் 80 அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். தாக்குதலுக்கான முழுப் பொறுப்பையும் மிகுந்த பெருந்தன்மையுடன் ஏற்றுக் கொண்ட பாக்கிஸ்தானிய அதிபர் முஷாரப் சொன்னார் "கொலைசெய்யப்பட்ட அனைவரும் பயங்கரவாதிகள், ஆப்கானில் கடமையாற்றும் அமெரிக்கப் படைகளைத் தாக்குவதற்கு பயிற்சி எடுத்துக் கொண்டிருந்தவர்கள். கொலைசெய்யப்பட்டவர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்று பச்சைப் பொய் சொல்கிறார்கள்." இத்தனைக்கும் கொலையுண்டவர்களில் 5 வயதுச் சிறுவர்களும் அடக்கம். இந்தத் தாக்குதல் அமெரிக்க விமானப் படைகளாலேயே நடாத்தப்பட்டது என்று அத்தாக்குதலில் காயமடைந்தவர்கள் சொல்கிறார்கள்.

இங்கேயும் தேசத்தின் இறைமை தேசப்பற்று எனக் கூறிக் கொண்டு குண்டு வீச்சுக் கொலைகளை நியாயப்படுத்தும் குரல்களைக் கேட்க முடிகிறது அல்லவா?

## உரிமை கொண்டாடுவது பற்றி

1967ம் ஆண்டு ஆறு நாள் யுத்தத்தில் சிரியா வசமிருந்த கோலான் குன்றுகளைக் கைப்பற்றியது இஸ்ரேல். அதன் தொடர்ச்சியாக நிகழ்ந்த போர்களின் விளைவால் இருநாடுகளும் சொந்தம் கொண்டாட முடியாதவாறு ஐ. நா. வின் கண்காணிப்புப் பிரதேசமாக கோலான் குன்றுகள் பிரதேசம் மாற்றப்பட்டது. ஐ.நா. வின் ஆசீர்வாதத்துடன் இஸ்ரேல் வெற்றிகரமாவும் தொடர்ச்சியாகவும் குடியேற்றங்களை நிறுவி வந்தது. அண்மையில் இது பற்றிப் பேசும் போது "கோலான் குன்றுகள் இஸ்ரேலின் பூர்வீக தாயகம். ஐ. நா கோலான் குன்றுகளை இஸ்ரேலிடம் ஒப்படைத்துவிட்டு விரைவில் வெளியேறிவிட வேண்டும்" என்று இஸ்ரேலியப் பிரதமர் சொல்லியிருக்கிறார்.

கவனிக்க:- இது பெயர்கள் மாற்றப்பட்ட உள்நாட்டுச் செய்தியல்ல...

## உலக வங்கி என்பது

உலகில் இருக்கவே கூடாத வங்கி என்றால் அது உலக வங்கி என்பதில் மாற்றுக் கருத்து இருக்கவே முடியாது. உலகில் வாழும் பல்லாயிரக்கணக்கான மக்களின் பசிக்கும் பட்டினிக்கும் வறுமைக்கும் எல்லையில்லாத துயரத்திற்கும் காரணமான அமைப்பு அது. இப்படியாக மனிதகுலத்திற்கு நன்மை, புரியும் அமைப்பிற்கு தலைமை தாங்க உலகின் இரட்சகன் அமெரிக்காவின் உதவிப் பாதுகாப்புச் செயலர் தெரியப்பட்டது அதிசயமல்ல. அவர் இனி உலக வங்கியானது பயங்கரவாதத்தை ஒழிக்கும் கருவியாக செயற்படும் என அண்மையில் தெரிவித்திருந்தார். போகிற போக்கில் வங்கிகள் எல்லாம் இனி பயங்கரவாதத்தை ஒழிப்பது, நுளம்புகளை அழிப்பது என்று புதிய சேவைகளை ஆரம்பிக்கும் போல.

## அருமையான நிபந்தனை

அமெரிக்கப் படைகள் ஈராக்கிலிருந்து வெளியேற வேண்டுமாயின் அமெரிக்க அதிபர் இரண்டு நிபந்தனைகளை விதித்துள்ளார்.

1. ஈரான் அணுச்செறிவூட்டலை நிறுத்த வேண்டும்.

2. லெபனானுடனான உறவை சிரியா துண்டிக்க வேண்டும்.

இவை இரண்டும் நிகழ்ந்தால் மட்டுமே அமெரிக்கப் படைகள் வெளியேறுவதுடன் ஈராக்கில் ஸ்தரத்தன்மை ஏற்படும் என்கிறார். ஆக அமெரிக்கப் படைகள் வெளியேறினால் தான் ஸ்தரத்தன்மை ஏற்படும் என்பதை ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் படைகள் வெளியேறுவதற்கும் நிபந்தனைகளுக்கும் என்ன தொடர்பு. இப்படி போனால் காஷ்மீர் பிரச்சனை முடிவிற்கு வந்து திபேத்திற்குள் தலாய்லாமா அனுமதிக்கப்பட்டால் தான் ஏ9 மீண்டும் திறக்கப்படும் என்றெல்லாம் அறிக்கைகள் வெளியாகலாம். நிபந்தனைகள் விதிப்பதுவும் அறிக்கைகள் வெளியிடுவதும் அமெரிக்காவுக்கு மட்டுமே உரித்துடைய தல்லவே.

# அமெரிக்காவின் ஆணைப்படி சதாமிற்கு மரணதண்டனை! புஷ்ஷைத் தூக்கிலிடுவது யார்?

அமெரிக்க ஏகாதிபத்தியம் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் தலைமையில் ஈராக் மீது ஆக்கிரமிப்புப் போர் தொடுத்து மூன்றரை வருடங்கள் கழிந்து விட்டன. அமெரிக்க பிரித்தானிய மற்றும் கூட்டுப் படைகளின் எண்ணிக்கை சுமார் இரண்டு லட்சமாகும். இந்த நவீன காட்டுமிராண்டிகளின் கொலை வெறியால் ஈராக்கிய மக்கள் தினம் தினம் கொல்லப்பட்டு வருகின்றனர். ஒரு மேலோட்டமான கணிப்பின்படி இதுவரை ஒன்றரை லட்சம் ஈராக்கிய மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. படுகாயங்கள் அடைந்தவர்கள் இருப்பிடங்கள் தொழில்கள் மற்றும் உறவுகளை இழந்தவர்கள் பல்லாயிரமாக இருந்து வருகின்றனர். ஈராக்கிய மக்களை ஷியா, சுன்னி, குர்திஷ் எனப் பிரித்து ஒருவருக்கு ஒரு வரை எதிராளிகளாக்கி அமெரிக்க ஏகாதிபத்தியம் இரத்தக் குளிப்பை நடாத்தி வருகின்றது. தரை கடல் ஆகாயம் எங்கும் தமது நவீன ஆயுதங்கள் கொண்டு தீப் பிளம்பு கக்கும் யுத்தம் நடாத்தி வருகிறார்கள் புஷ்சும் அவன் தலைமையிலான யுத்தவெறியர்களும். அதன் மறைவிலே ஈராக்கின் எண்ணெய் வளத்தை கொள்ளையடித்து வருவதே மிக முக்கியமான விடயமாகும்.

இத்தனைக்கும் மத்தியில்தான் முன்னாள் ஜனாதிபதி சதாம் ஹூஷைனுக்கு ஈராக்கிய நீதிமன்றம் மரணதண்டனை விதித்து தூக்கிலிடும்படி தீர்ப்பு வழங்கியிருக்கிறது. ஈராக்கில் இருப்பது ஒரு அமெரிக்க பொம்மை அரசாங்கம். அதன் கீழ் உள்ளதோ அமெரிக்க கைக்கூலி நீதிமன்றம். அதன் தீர்ப்பு வேடிக்கை தரும் ஒன்றாகும். சதாம் ஹூஷைன் கொலைகள் புரியாத ஒரு ஆட்சியாளர் அல்ல. தனது ஆட்சிக் காலத்தில் ஷியா, குர்திஷ் இன மக்களை மட்டுமன்றி தனது சொந்த இனமான சுன்னி இன முஸ்லீம்கள் மத்தியிலும் கொலை புரிந்தவர் என்பது மறுக்கவியலாதது. இதே சதாம் ஹூஷைன் தனது ஆரம்ப ஆட்சிக் காலத்தில்




பல்லாயிரம் ஈராக்கிய கம்யூனிஸ்டுக்களை அந்த மண்ணிலே கொன்று குவித்தவர் என்பதும் இரத்தம் தோய்ந்த வ்ரலாறுதான். இத்தகைய ஒரு சர்வாதிகாரிக்கு உரிய தண்டனையை வழங்க வேண்டியவர்கள் யார் என்பதே எழுந்துள்ள கேள்வியாகும். ஈராக்கின் ஆட்சியையும் அதற்குரிய தலைமையையும் தேர்ந்தெடுக்க வேண்டியவர்கள் ஈராக்கிய மக்களே. அவ்வாறே தமது நாட்டு மக்களை கொன்றொழித்து ஆட்சி நடாத்திய ஒரு சர்வாதிகாரியை மக்கள் மன்றத்தில் நிறுத்தி விசாரிக்க வேண்டியதும் தண்டனை வழங்க வேண்டியதும் ஈராக் மக்களுக்குரிய உரிமையாகும். அந்த உரிமை ஈராக்கிய மக்களின் இறைமை சுதந்திரம் சுயாதிபத்தியத்துடன் சம்மந்தப்பட்ட ஒன்றாகும். அதில் தலையிடவோ ஆணையிடவோ அல்லது தீர்ப்புக் கூறவோ அமெரிக்காவிற்கோ வேறு எவருக்குமோ உரிமைகிடையாது.

அமெரிக்க ஜனாதிபதி இன்று உலகம் ஒப்புக் கொள்கின்ற ஒரு அப்பட்டமான கொலைகாரன். இந்தக் கொலை வெறியன் ஜனநாயகம் சுதந்திரம் மனித உரிமை என்பனவற்றின் பெயரில் இன்று ஈராக் ஆப்கா னிஸ்தான் நாடுகளிலும் தனது கையாளான இஸ் ரேலின் மூலம் பலஸ்தீனத்திலும் லெபனானிலும் கொன்று குவித்து வரும் ஈனச் செயலுக்கு எத்தனை தடவை மரணதண்டனை விதிக்க வேண்டும். உலக மக்கள் அதற்கான தீர்ப்பை என்றோ ஒரு நாள் அமெரிக்க ஏகாதிபத்திய ஆட்சியாளர்களுக்கு எழுதியே தீருவார்கள்.

~நமன்~

# ஒடேகாவின் தேர்தல் வெற்றியும் நீகரகுவாவின் எதிர்காலமும்

டேனியல் ஒட்டேகா, 1979 இல் நிகரகுவாப் புரட்சியின் மூலம் உலகைக் கலக்கிய ஒருவர். ∴பிடல் காஸ்ரோ, சேகுவரா ஆகியோருக்கு அடுத்த படியாக, புரட்சிகர இயக்கங்களால் போற்றப்பட்ட ஒருவர். 1979 இல் சாமோசாவின் அமெரிக்க ஆதரவு ஆட்சியைத் துரத்தியடித்து தனது "சாண்டனிஸ்டா" இயக்கம் மூலம் 1979இல் பதவிக்கு வந்தவர்.

1979 முதல் 1990 வரையிலான 12 ஆண்டுகள் சாண்டனிஸ்டாக்களின் ஆட்சியில் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத்தரம் வெகுவாக உயர்ந்தது. சாண்டனிஸ்டாக்களின் ஆட்சியை ஒழித்துக்கட்ட கங்கணம் கட்டியிருந்த அமெரிக்காவின் தொடர்ச்சியான சூழ்ச்சிகளின் விளைவாகவும் பொருளாதார நெருக்குவாரங்களினாலும் 1990ம் ஆண்டுத் தேர்தலில் சாண்டனிஸ்டாக்கள் தோல்வியைத் தழுவினர். 16 ஆண்டுகள் இடைவெளியின் பின்னர் மீண்டும் டேனியல் ஒட்டேகா இப்போது பதவிக்கு வந்துள்ளார்.

ஒக்டேகாவின் வெற்றியை தடுப்பதற்கு அமெரிக்கா மேற்கொண்ட முயற்சிகளும் வேறுபல செயற்பாடுகளும் ஒட்டேகாவின் வெற்றிக்கு ஒரு கூடுதல் பரிமாணத்தை கொடுத்துள்ளன. தேர்தல்களில் குழறுபடிகளை தவிர்ப்பதற்கென தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச தாபனத்திற்கு 15 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கி தேர்தலை ஒழுங்காகக் கண்காணிக்கச் சொன்னது அமெரிக்கா, இதை விட ஒக்டேகாவிற்கு எதிரான வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரத்திற்காக அமெரிக்கா 17 மில்லியன் அமெரிக்க டொலர்களைச் செலவு செய்தது. இருந்த போதும் ஒக்டேகா வெற்றி பெற்று பதவிக்கு வந்துள்ளார். அமெரிக்காவில் வேலை பார்க்கும் நிகரகுவா மக்கள் தாய்நாட்டுக்கு திருப்பி அனுப்பும் அந்நியச் செலவானியானது (ஆண்டுக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள்) ஒக்டேகா வெற்றி பெற்றால் நிகரகுவாவிற்கு அனுப்பவிடாது நிறுத்தப்படும் என அமெரிக்கா அறிவித்து மக்களை அச்சுறுத்தியது. அதுமட்டுமல்லாமல் ஒட்டேகாவையும் சாண்டனிஸ்டாக்களையும் சர்வதேச பயங்கரவாதிகளென பிரசாரம் செய்தது.

இத்தனை தடைகளையும் தாண்டி, வெற்றிபெற்று பதவிக்கு வந்துள்ளார் டேனியல் ஒட்டேகா. முழு அமெரிக்க கண்டத்திலும் கெயிட்டிக்கு அடுத்தபடியான வறுமையான நாடு நிகராகுவா. இந்நாட்டின் 3∴4 பங்கினருக்கு அடிப்படையான நிறை உணவு கூடக் கிடைப்பதில்லை. 55 விழுக்காடு மக்களுக்கு அடிப்படை மருத்துவ வசதிகள் கிடையாது. மொத்த மக்கள் தொகையின் அரைவாசிக்கு மேற்பட்டவர்களின் நாளாந்த வருமானம் ஒரு அமெரிக்க டொலரையும் விட குறைவானது. இந்த நிலையில் ஒக்டேகா இலகுவாக ஆட்சியை நடாத்தமுடியாது என்பது உண்மையே.


இந்நிலையில் ஒக்டேகா எவ்வாறு செயல்படுவார் என்பதைப் சற்று பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net
நன்றி - நூலகத்திட்டம்



# பொற்காலமும் புதுயுகமும்



**பேராசிரியர் க. கைலாசபதியின் 24வது நினைவு தினத்தை முன்னிட்டு இக் கட்டுரை வெளியிடப்படுகின்றது. அவரது ஒப்பியல் இலக்கியம் என்னும் நூலில் "பொற்காலமும் புதுயுகமும்" எனும் தலைப்பில் அமைந்த கட்டுரையின் முக்கிய பகுதிகளை இடம் கருதி இங்கே சுருக்கித் தருகின்றோம். முழுமையான கட்டுரையை மேற்படி நூலில் படிக்கலாம். (ஆ-ர்)**

சென்னை உயர் நீதிமன்றத்து நீதிபதிகளில் ஒருவராக இருந்த டி. எல். வெங்கட்ராம ஐயர் அவர்கள் ஒரு சந்தர்ப்பத்தில் "வட துருவத்திலுள்ள பெரும் பனி மலைகளுக்குத் தீ வைத்துவிடலாம். தமிழிலே புதுமைப் புரட்சியேற்படுவது அதைவிடக் கடினம்" என்று கூறினாராம். வாய்மொழியாக வழங்கும் இக்கூற்றின் உண்மை பொய் எவ்வாறாக இருப்பினும் அடிப்படையான ஒரு நம்பிக்கை வரட்சியை இக்கூற்று எடுத்து விளக்குவதாக உள்ளது. பழமைப்பற்றும் தன்னிறைவு உணர்வும் தமிழ்ச் சமுதாயத்தில் சற்று அதிகமாகவே காணப்படுகின்றன என்பதே பொதுவாகக் காணப்படும் கருத்து. மாற்றமடையாத- தேங்கி நிற்கும் சமுதாயங்களில் (Stagnant Society) இத்தகைய பழைமையாதிக்கம் காணப்படுவது உலகெங்கும் பொதுவான நியதி. உண்மையான பொருளாதார மாற்றத்தை ஆதாரமாகக் கொண்ட சமுதாயப் புனரமைப்பினைத் தொடர்ந்தே புதுமை பூத்துக் குலுங்கும்; அதுவும் ஒரு வரலாற்று நியதிதான்.

இவ்விடத்திலே எமது சமுதாயத்திற் காணப்படும் பழைமைப் பிடிப்பின் ஓர் அமிசத்தைச் சிறிது ஆராயலாம். பழைமையாதிக்கத்தைக் கருத்தளவில் ஆராய்ந்து பார்க்கின், அதன் ஊற்றை இனங்கண்டு கொள்ள முடியும், எமது வரலாற்றின் தொடக்கத்திலே மகோன்னதமான பொற்காலம் ஒன்று நிலவியது என்றும், அதன் பின் வரவர இழி நிலை வளர்ந்து வந்துள்ளது என்றும் ஐதீகம் ஒன்று கருத்துலகிலே ஆழப்பதிந்துள்ளது. உதாரணமாக, தமிழ் நூல் வரலாறு என்ற நூலிலே திருவாளர் பாலூர் கண்ணப்ப முதலியார் பின்வருமாறு எழுதுகிறார்; "பழங்காலம் பொற்காலம் ஆகும். அக்காலத்து மக்கள் நனிநாகரிகராய் வாழ்ந்தனர். தங்கள் வாழ்வை இயற்கையோடு இணைத்து வாழ்ந்தனர். இலக்கிய வளத்தில் சிறந்து விளங்கினர்."

எதிர்காலத்தைப் பற்றிக் கனவு காணும் இலட்சியவாதிகள் சிலர் குறைபாடெதுவுமற்ற கற்பனையுலகம் ஒன்றைப் பற்றுக்கோலாகக்கொள்வது போலச் சென்ற காலத்தின் ஒரு பகுதியை நிறைவான சமுதாயம் இயங்கிய பொற்றகாலமாகச் சிலர் கொள்வர். இம்மனப் பதிவு அறிவின் துணையாற் பெறப்படுவதன்று. அரைகுறைச் செய்திகளின் அடிப்படையிலும், ஒரு வகையான மயக்க உணர்வின் அடிப்படையிலுமே பெறப்படுவது. ஆயினும் இதற்கும் கோட்பாட்டு அடிப்படை ஒன்றுள்ளது. அதனைச் சுருக்கமாக விவரிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரும்பாலான தமிழரைப் பொறுத்தளவில், ஈடிணையற்ற ஏகாதிபத்தியப் பெருமையுடன் "அவனி முழுதாண்ட" சோழப் பெருமன்னர் மதிப்புக்குரியவராயிருப்பினும், 'சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்த' முடியுடை மூவேந்தர் அரசோச்சிய காலப் பகுதியே பொற்காலமாகக் கொள்ளப்படுகிறது. பழமைக்கும் பழமையானதே பாராட்டுக்குரியது போலும். அது மட்டுமன்று, பிற்காலத்திலே தென்னகத்தில் எழுந்த, சேர, பாண்டிய அரசுகளோடும், சோழப் பேரரசோடும் ஒப்பிடும்போது "சங்ககால" முடியுடை மூவேந்தர் குறுநில மன்னராகவே காட்சியளிக்கின்றனர். கங்கா நதியும் கடாரமும் கைக்கொண்டு சிங்காசனத்திலிருந்த செம்பியரான இடைக்காலச் சோழப் பெரு மன்னரோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் புறநானூற்றுப் பாடல்கள் புகழும் சோழமன்னர்கள் சிறுநிலக் கிழாராகவே தோன்றுவர். அதைப்போலவே திரிபுவனச் சக்கரவர்த்திகள் எனத் தம்மை அழைத்துக் கொண்ட இரண்டாம் பாண்டியப் பேரரசின் பெருமன்னரோடு ஒப்பிடுமிடத்து, சங்ககாலப் பாண்டிய மன்னர் மன்னராகவே தோன்றுகிறார்கள் அல்லர். அவ்வாறிருந்தும், இடைக்காலத்தில் புகழொடு விளங்கிய பாண்டிய சோழப் பெரு மன்னர்கள் வீரயுகத்தில் வாழ்ந்த தத்தம் மூதாதையரது 'உலகளந்த சிறப்புக்கு' த் தாம் அருகதையற்றவர் என்றே கருதினர். அந்தளவுக்கு வீரயுகம் ஈடிணையற்றதொன்றாகப் பிற்காலத்தவர் கருத்தில் வேரூன்றியிருந்தது. இக்காலத்திலும் தமிழபிமானத்தோடு பெயர் மாற்றிச் சூட்டிக் கொள்பவர்கள் வீரயுக மன்னர் பெயர்களையும் அவை போன்றவற்றையுமே விரும்புவது கண்கூடு. சுருங்கக் கூறின் ஏறத்தாழ இரண்டாயிரம் வருடங்களாக வீரயுகம்- சான்றோர் வாழ்ந்த காலம்- கழிந்த பொற்காலமாகக் கருதப்பட்டு வருகிறது.

இப்பழமைப் பற்று நன்மைக்கும் தீமைக்கும் ஏதுவாக உள்ளது. நியாயமான புராதனப் பெருமை, நியாயம் அற்ற அகங்காரம், அர்த்தமற்ற தூய்மை வாதம் முதலியவற்றிற்கும் ஆதாரமாக அமைந்து விடுகிறது. இதற்கு காரணம் பொற்காலத்தைப் பற்றிய பெருமித உணர்வேயாகும்.


கிரேக்க இலக்கியங்களிலும் இத்தகைய ஒரு நம்பிக்கையைக் காணலாம். தமது 'இன' வரலாற்றுத் தொடக்கத்தில் இயற்கையின் மத்தியில் மக்கள் இன்பமாக வாழ்ந்த பொற்காலம் (Golden Age) ஒன்று இருந்தது எனக் கிரேக்க ஆதிக்கவிகளே நம்பினர். இறுதியாக ஒன்று கூறலாம். பொற்காலத்தைப் பற்றிய உணர்வும் எண்ணமும் முற்றிலும் மூடநம்பிக்கையென்று கருதுதல் தவறு. அதனை யார், எதற்காகப் பயன்படுத்துகிறார்கள் என்பதே கவனிக்க வேண்டியது. அரசியல் அதிகாரத்தை நாடும் ஆளும் வர்க்கத்தின் ஒரு பகுதியினர் மொழி, இனம் ஆகியவற்றின் பழைய பொற்காலத்தை மக்களுக்குக் காட்டித் தம்கருமம் பார்க்கின்றனர்; இலக்கிய சனாதனிகள் பொற்காலத்தைப் பிரமாணமாகக் கொண்டு 'தொல்லாசிரியர் நல்லாணை' என்ற பெயரில் தமது வலுவிழந்த கோட்பாடுகளை நிலைநாட்ட முயல்கின்றனர். இனவாதிகள், பொற்காலத்தைத் தமது சிறையில் அடைத்துக் காட்சிக்காக வைத்துப் பிழைக்கின்றனர். இவையெல்லாம் பொற்காலத்தைப் பயன்படுத்துவோர் பற்றியன. ஆனால் மக்களும் பொற்காலத்தைத் தமக்குப் பற்றுக்கோடாகக் கொள்வதுண்டு. முடியுடை மூவேந்தர் ஆட்சியும் உறந்தை போன்ற இடங்களிலிருந்த அறங்கூறவையங்களும் அக்கால மன்னர்கள் மக்கள் மீது திணித்த வர்க்க ஆட்சியையே காட்டுகின்றன. இரத்த உறவினராய் ஒரு தாய் வயிற்றிற் பிறந்த நேசபாசத்துடன் இயற்கையின் மத்தியில் வாழ்ந்த குலமரபுக் குழுக்களின் அழிவின் மீதே அரசுகள்- வர்க்க ஆட்சி- ஏற்பட்டது. அந்த வர்க்கத்தின் வழிவழி வரும் இன்றைய ஆளும் வர்க்கத்தினர், மூவேந்தர் ஆட்சி முதலியவற்றைப் பொற்காலமாகக் காட்டுவர். ஆனால் மக்களோ அடிமனத்தில் பகிர்ந்துண்டு வாழ்ந்த இன்ப நினைவுகளை வாழையடி வாழையாகப் பேணி வைத்துள்ளனர். ஆண்டான் அடிமையற்ற சகோதரத்துவ சமுதாயமே மக்கள் இதய வேட்கை. ஆகவே அந்த வகையில் பொற்காலம் புனிதமான இலட்சியங்களைப் பாதுகாத்து வருகிறது என்றும் கூறலாம். அது வெளிப்படும் விதம், விகற்பங்களை யுடையதாயிருப்பினும் மறைந்து போன வர்க்க பேதமற்ற சமூகத்தை நினைவு கூர்வதால் அதற்கு ஒரு தார்மீக பலம் உண்டு.-



# தாயுள்ளம்

குழந்தையின் காலில் முள் பட்டால்
தனது கண்ணில் முள் பட்டது போலவும்
குழந்தை பசியால் அழுதால்
தான் முழுநாழும் பட்டினி கிடந்தது போலவும்
தவிப்பதற்கு ஒரு தாய்க்கு மட்டுமே இயலும்.
சேய் வளர்ந்து வயதேறிப் போனாலும்
வேற்றூர் போய் வெகுதொலைவில் வாழ்ந்தாலும்
மனதினுள் என்றென்றும்
தன் குழந்தையாய் வைத்துப் பேண
ஒரு தாய்க்கு மட்டுமே இயலும்.
தன்னை எவ்வாறு எவர் தண்டித்தாலும்
பொறுத்தருளும் தாயுள்ளம்
தன் சேயை வேறொருவர்
அதட்டினால் தாங்காது.
எனவே தான் தாயன்பை அளக்காதே
தாயுள்ளத்தின் ஆழத்தைக் கணிக்காதே.
தாயொருத்தி பறிகொடுத்த சேயின்
வயதென்ன என்றோ
சேயர் பிறர் உளரோ என்றோ
கேள்வி எழுப்பாதே.
ஏனெனில் ஒரு சேயின் சாவு
தாய்க்கு ஒவ்வொரு நாளும் பொழுதும்
அவளது சாவாகிறது.
சேயின் செல்வமோ வறுமையோ
அறிவோ அறியாமையோ
ஆற்றலோ இயலாமையோ
உடல் வலுவோ வலுவின்மையோ
தாயன்பிற்கு ஒரு பொருட்டல்ல.
சேயின் இழப்பின் வேதனையைக்
கண்ணீரின் வெம்மையையோ
கதறலின் தொனியையோ
கொண்டு மதிப்பிடாதே
வேதனையின் வெளிப்பாடுகள்
வேதனையை மறைக்க
இயலாமையின் அடையாளங்கள் மட்டுமே.
கூலிக்காக உயிரைக்குடிப்பவனோ
ஏனென்று எண்ணாமல்
ஏவலுக்காகக் கொல்பவனோ
ஒருகணம்,
தனது தாயின் அன்பைத்,
தன்னை இழந்திருந்தால்
தன் தாய் பட்டிருக்கக் கூடிய தவிப்பைக்
கருத்திற் கொண்டிருந்தால்
இம்மண்ணில் ஏன் இத்தனை வீண்
இறப்புக்கள்?


~புவனம்~



www.tamilarangam.net நன்றி - நூலகத்திட்டம்



REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
வெகுஜன அரசியல் மாதப் பத்திரிகை
# புதிய பூமி
පුදිය පූමි Puthiya Poomi
சுற்று13 டிசம்பர் 2006 பக்கம்12 விலை 15/- சுழற்சி 98
இணையத் தளம் : website: www.ndpsl.org.



**அமெரிகக ஏகாதிபத்தியத்தை எதிர்த்து 45 ஆண்டுகளாக கியூப நாட்டையும் மக்களையும் தலைமை தாங்கி வழி நடத்தி வரும் ஃபிடல் காஸ்ரோ 80வது வயதை அடைந்தார். அதனை தலைநகர் ஹவானாவில் ஐந்து நாள் கொண்டாட்டங்கள் மக்களால் நடாத்தப்பட்டன.**

## ராணுவ மேலாதிக்கம் வலுவடைகிறது

இலங்கையில் தற்போது நிலவி வரும் அரசியல் பொருளாதார நெருக்கடிக ளின் மத்தியில் பேரினவாத ராணுவ மேலாதிக்கம் முனைப்புடன் முன்செ ல்லும் அபாய நிலை தோன்றியுள்ளது. இதனைத் தடுத்து நிறுத்துவதற்கு நாட்டின் மீதும் மக்கள் மீதும் அக்கறையுள்ள அனைத்து ஜனநாயக சக்திகளும் ஐக்கியப்பட்டு மக்கள் இயக்கங்களையும் போராட்டங்களையும் முன்னெடுக்க வேண்டும். அல்லாது விடின் பேரினவாத ராணுவ ஒடுக்கு முறை என்பது முழுமையான பாசிச சர்வாதிகாரமாக மாற்றமடைவதைத் தடுக்க முடியாத அவல நிலையே தோன்றும். அதற்குரிய ஒரு முன்னறிவிப்பாகவே பாராளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் கொழும்பில் பட்டப்பகலில் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் நிகழ்ந்துள்ளது. ஜனநாயகம், மனித உரிமை, தமிழ் மக்களின் அவல நிலை போன்றவற்றுக்காகப் பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் குரல் கொடுத்து எதிர்ப்பு இயக்கங்களில் பங்கு பற்றி வந்த இளம் பாராளுமன்ற அரசியல்வாதியான நடராஜா ரவிராஜ் மீதான படுகொலையானது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் கீழான பாராளுமன்ற ஜனநாயகத்தின் போலித்தனத்தை அம்பலப்படுத்தியுள்ளது.

அண்மைய மாதங்களில் பல்வேறு விதமான கண்டனங்களும் அதிருப்திக ளும் எதிர்ப்புகளும் தெரிவிக்கப்பட்டுவந்த போதிலும் அவற்றைச் செவிமடுக்காது வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் மீதான விமானத்தாக்குல்களும் எறிகணை வீச்சுக்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் ஒன்றே கிழக்கின் வாகரை கதிரவெளி பாடசாலையில் தஞ்சம் புகுந்த மக்கள் மீதான கொடூரத் தாக்குதலாகும். மேலும் ராணுவ ஆலோசகர்களது முடிவினால் ஏ9 பாதை மூடப்பட்டு மூன்று மாதங்கள் கடந்து விட்டன. அதனால் வடபுலத்தில் பெரும் மனித அவலம் தலைவிரித்தாடுகின்றது. அதே வேளை வடக்கு கிழக்கில் படுகொலைகளும் ஆட்கடத்தல்களும் நாளாந்தம் அதி கரித்து உச்ச நிலையை அடைந்துள்ளது. அரசியல் சமூக செயற்பாட் டாளர்கள் செயற்படவோ தட்டிக் கேட்கவோ முடியாதளவுக்கு மிரட் டல்களும் அச்ச நிலையும் கருத்துச் சுதந்திர மறுப்பும் நிலவி வருகின்றது. வடக்கு கிழக்கின் இன்றைய நிலை மலையகத்திற்கும் தெற்கிற்கும் விரிவடைய அதிக காலம் எடுக்கமாட்டாது. அத்தகைய பேரினவாத ராணுவ முனைப்பானது விரைவில் அப்பட்டமான பாசிச சர்வாதிகாரமாக மாற்றமடையவே செய்யும். அதனால் முழு நாடும் மக்களும் பாரிய அழிவகளை எதிர்கொள்ள நேரிடும் என்பது முன்னெச்சரிக்கையுடன் புரிந்து கொள்ளப்படல் வேண்டும்.

எனவே நீதியும் நியாயமும் மறுக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழ் முஸ்லீம் மக்களும் மலையக மக்கள் உள்ளிட்ட தெற்கின் தொழிலா ளர்கள் விவசாயிகள் மற்றும் உழைக்கும் மக்களும் தமக்குரிய மாற்று அரசியல் வேலைத்திட்டத்தின் கீழ் ஐக்கியப்பட வேண்டிய அவசியமும் தேவையும் ஏற்பட்டுள்ளது. அரசாங்கத்திடமோ எதிர்க்கட்சிகளிடமோ அல்லது சர்வதேச சமூகம் எனப்பட்ட ஏகாதிபத்திய சக்திகளிடமோ எதிர்பார்ப்பத ற்கு எதுவுமே இல்லை என்பது உணரப்பட வேண்டியதாகும். ஆதலால் மக்களை அணிதிரட்டி பரந்து பட்ட வெகுஜன இயக்கங்கள் போராட்டங்களால் ஆளும் தரப்பினருக்கு கடுமையான எதிர்ப்பையும் அழுத்தங்களையும் கொடுக்க வேண்டும். அதன் மூலம் அரசியல் தீர்வுக்கும் சமாதானத்திற்கும் மக்களின் அன்றாட வாழ்க்கை நெருக்கடிகளுக்கும் உரிய மாற்று நடவடிக்கைகளை எடுக்க அரசா ங்கத்தை நிர்ப்பந்திப்பதே உடனடி மாற்று அரசியல் வேலைத்திட்டமாக அமைய வேண்டும். இதனை முன்னெடுக்க நாட்டையும் மக்க ளையும் நேசித்து நிற்கும் அனைத்து ஜனநாயக சக்திகளும் ஒன்றிணைந்து செயல்பட முன்வரல் வேண்டும் என்பதையே எமது கட்சி வற்புறுத்துகின்றது.

15-11-2006 அரசியல் குழு புதிய - ஜனநாயக கட்சி

## நேபாளத்தின் மக்கள் யுத்தப் போராட்டமும் தற்போதைய சமாதான ஒப்பந்தமும்

நேபாளத்தில் மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் கடந்த பத்து வருடங்களாக மக்கள் யுத்தப் பாதையில் ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வந்துள்ளது. மன்னராட்சிக்கு எதிரான வெகுஜனப் போராட்டங்களும் இடம் பெற்றன. ஏழு கட்சிக் கூட்டணி பிரதமர் கிரிஜா கொய்ராலா தலைமையில் தற்காலிக அரசாங்கத்தை சில மாதங்களுக்கு முன்பு பொறுப்பேற்றுக் கொண்டது. ஏழு கட்சிக் கூட்டணிக்கும் மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையில் இடம் பெற்ற பல சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு பின் கடந்த நவம்பர் 16ம் திகதி சமாதான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. இதில் பிரதமர் கிரிஜா கொய்ராலாவும் கம்யூனிஸ்ட் தலைவர் பிரசண்டாவும் கையெழுத்திட்டுள்ளனர்.

அதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஆறு பிரதான விடயங்கள் கீழே தரப்படுகின்றது. இச் சமாதான உடன்படிக்கை இன்றைய சூழலில் நோக்குதற்குரியதாகும்.

1. ஆயுத மேற்பார்வை

(அ) மாவோ கம்யூனிஸ்ட் கட்சியின் ஆயுதங்களும் அதேயளவு நேபாள இராணுவத்தின் ஆயுதங்களும் ஒரே இடத்தில் களஞ்சியப்படுத்திப் பூட்டிவைக்கப்படும். இவ் ஆயுதக் களஞ்சிய சாலையின் திறப்புகள் அவரவர் தரப்பிடமே இருக்கும். இதனை ஐ. நா. வின் கண்காணிப்புக்குழு மேற்பார்வை செய்து வரும்.

(ஆ) மாவோ இயக்கத்தினர் தமது தளங்களின் பாதுகாப்பிற்கென குறித்தளவு ஆயுதங்களை வைத்திருப்பர்.

(இ) மாவோ ஊழியர்கள் ஏழு பெரிய தளங்களில்- சுமார் 35000 பேர் தங்க வைக்கப்படுவர்.

2. இடைக்கால ஏற்பாடுகள்.

(அ) 330 அங்கத்தவர்களைக் கொண்ட ஓர் இடைக்கால சட்டமன்றம் ஏற்படுத்தப்படும். ஒரு சிலரைத் தவிர முன்னைய பாராளுமன்ற அங்கத்தவர்கள் அனைவரும் இதில் இடம் பெறுவர்.

நேபாள காங்கிரஸ் 75 பேரையும் ஐக்கிய மாக்சிச லெனினிசக் கட்சியாளர் 73 பேரையும் மாவோவாதிகள் 73 பேரையும் ஜனநாயகத்திற்கான அமைப்பு 42 பேரையும் ஏனையோர் 48 பேரையும் அங்கத்தவர்களாகக் கொண்டிருப்பர்.

(ஆ) இடைக்கால அரசியல் யாப்பு 2006 நவம்பர் 26ம் திகதி அறிவிக்கப்படும். இடைக்கால அரசியல் யாப்பு இடைக்கால சட்டசபை இடைக்கால அரசாங்கம் எனபன டிசம்பர் 1ம் திகதி முதல் இயங்கும். மாவோ அமைப்பின் கீழான மக்கள் அரசும் மக்கள் நீதிமன்றமும் அதே தினத்தில் கலைக்கப்படும்.

(இ) 2007 யூன் இரண்டாவது வாரத்தில் அரசியற் பேரவைக்கான தேர்தல் இடம் பெறும். ஐ. நா அதை மேற்பார்வை செய்யும்.

(ஈ) அரசியற் பேரவையின் முதலாவது கூட்டத்தில் மன்னராட்சியின் எதிர்காலம் பற்றிய தீர்மானம் சாதாரண பெரும்பான்மை வாக்குகளால் தீர்மானிக்கப்படும்.

(உ) அத[illegible]ர நாட்டு விவகாரங்களில் அரசர் எந்த ஒரு பாத்திரத்தையும் வகிக்கமாட்டார். அரசர் பிரேந்திராவினதும் அவரது மனைவி ஐஸ்வரியாவினதும் அவர்களது குடும்பத்தினரதும் சொத்துக்கள் அரசாங்க உடமையாக்கப்பட்டு ஒரு நம்பிக்கை நிதியத்திடம் ஒப்படைக்கப்படும்.



நோபாள பிரதமர் கிரிஜா கொய்ராலாவும் கம்யூனிஸ்ட்டு தலைவர் பிரன்சண்டாவும் சமாதான ஒப்பந்த மேசையில் அமர்ந்து இருப்பதைக் காணலாம்

3. அரசியலமைப்பு பேரவை

(அ) அரசியலமைப்பு பேரவை 425 அங்கத்தவர் களைக் கொண்டிருக்கும். ஒரு முறைமையின் கீழ் 205 பேர் தெரிவு செய்யப்படுவர். 16 பேர் அமைச்சர வையால் நியமிக்கப்படுவர். மிகுதியானவர்கள விகி தாசார முறைப்படி தெரிவு செய்யப்படுவர்

(ஆ) 18 வயதிற்கு மேற்பட்ட சகல நேபாள பிரஜைகளும் அரசியலமைப்பு பேரவைக்கான தேர்தலில் வாக்களிக்கும் உரிமையுடையவர்கள்.

4. நடைமுறைப்படுத்தல் தொடர்பான விடயங்கள்

(அ) பிரதமர் தலைமையில், பிரதம நீதியரசர் இடைகாலப் பேரவையின் சபாநாயகர் உள்ளிட்ட அங்கத்தவர்களைக் கொண்ட அரசியலமைப்பு கவுன்சில் ஒன்று ஏற்படுத்தப்படும். 'இடைக்கால அரசியல் யாப்பில் ஏற்படக் கூடிய சிக்கல்களைத் தீர்த்து வைக்கு முகமாக அரசியலமைப்பு நீதிமன்றம் ஒன்று ஏற்படுத்தப்படும்.

(ஆ) உள்ளூர் ஆட்சி மன்றங்கள் மக்கள் பேரவைக்கும் மாவோ அமைப்பினருக்குமிடையேயான புரிந்துணர்வுடன் செயற்படும்.

(இ) அரசியலமைப்பு பேரவையின் தேர்தலுக்கு முன் பிரஜா உரிமை சம்பந்தப்பட்டவிடயங்கள் தீர்த்துவைக்கப்படும். 1990ம் ஆண்டை வெட்டுத் திகதியாகக் கொண்டு அத்தாட்சிப் பத்திரங்கள் வழங்கப்படும்.

4. ஏனைய விடயங்கள்

(அ) அரசு நிறுவனங்களை மறுசீரமைப்பதற்காகவும் தற்போதுள்ள ஒற்றையாட்சி முறைமையில் ஒரு முழுமையான, ஜனநாயக முற்போக்கான அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்தும் நோக்கில் ஓர் உயர்மட்ட ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டு வர்க்க, இன, மொழி, பண்பாட்டு, மத, பிராந்திய பாகுபாடுகளை நீக்க வழி சமைக்கப்படும்.

(ஆ) கிளர்ச்சியின் போது இறந்தவர்களுக்கும் இடம்பெயர்ந்தவர்களுக்கும் நிவாரணம் நட்ட ஈடு வழங்குவது தொடர்பாக ஒரு முறைமையை ஏற்படுத்தவும் இணங்கப்பட்டது. முதல் நடவடிக்கையாக இடம் பெயர்ந்த சுமார் ஐந்து இலட்சம் மக்களையும் அரசியலமைப்பு பேரவையின் தேர்தலுக்குமுன் அவரவர் சொந்த இடங்களில் குடியமர்த்த ஏற்பாடு செய்யப்படும்.

(இ) "உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு" என்ற பெயரில் ஒரு உயர்மட்ட அமைப்பை ஏற்படுத்தி நல்லிணக்கத்திற்கு வழியேற்படுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

மேற்படி ஒப்பந்தமும் இணக்கப்பாடும் பல்வேறு சவால்களையும் வாதப்பிரதிவாதங்களையும் தோற்வித்துள்ளது. மேற்படி ஒப்பந்தம் 250 வருடங்களுக்கு மேற்பட்ட நிலவுடைமை மன்னாராட்சியையும் மக்கள் மீதான அதன் கொடூரங்களையும் முடிவுக்கு கொண்டு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது, ஆனால் அதற்கு உலக- பிராந்திய மேலாதிக்க சக்திகளான இந்திய அமெரிக்க ஆளும் வர்க்க சக்திகள் இடமளிக்குமா? நேபாள மாஓவாத கம்யூனிஸ்ட் கட்சியின் எதிர்காலம் எவ்வாறு அமையப்போகின்றது. இதுவரை போராட்டங்களினால் பெற்று நிலைநிறுத்தி வந்தவைகளை இணக்கப்பாட்டின் மூலம் கையிழக்கப் போகின்றதா? சமரசரத்தின் மூலம் தன்னையும் கரைத்து மக்களையும் நடுத்தெருவில் கைவிடப் போகின்றதா? இவற்றுக்கு பதில் தேட சிறிது காலம் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது.

### யுத்தப் பேரழிவுக்குள்

1ம் பக்க தொடர்ச்சி

தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடிய வடக்கு கிழக்கு இணைந்த சுயாட்சித் தீர்வை முன்வைப்பதற்குப் பதிலாக ராணுவ ஒடுக்கு முறை மூலம் பதில் இறுப்ப திலேயே முனைப்புக் காட்டி வந்துள்ளது. அதுவே யுத்தமாக விரிவு பெற் றது. அந்த யுத்தத்திற்கு ஊக்கமளித்த "சர்வதேச சமூகம்". இந்தியா என்பன தமக்குரிய பொருளாதார அரசியல் ராணுவ ஆதிக்க ஆதாயங்களைப் பெற்றுக் கொண்ட வண்ணமே உள்ளன. இன்னுமொரு யுத்தம் வெடிக்கும் சூழலில் நேரடியாகவே தலையீடுகள் செய்வதற்கான நிகழ்ச்சி நிரலுடனேயே அவை இருந்து வருகின்றன. இறைமை பற்றி ஓலம் வைக்கும் பேரினவாதிகள் இதனைப் பற்றி உணர்ந்து கொள்வதாக இல்லை. ஏற்கனவே புரிந்துணர்வு- யுத்த நிறுத்த ஒப்பந்தம் வெறும் பெயரளவில் இருந்து வரும் அதேவேளை தாக்குதல்கள் பதில் தாக்குதல் என்ற பெயரில் பிரகடனப்படுத்தப்படாத யுத்தம் முன்னெடுக்கப்பட்டே வந்துள்ளது. அதன் ஒரு பகுதியாக ஏ9 பாதை மூடப்பட்டு வடக்கிற்கான உணவு விநியோகமும் போக்குவரத்தும் தடுக்கப்பட்டது. அவ்வாறே கிழக்கில் சில பிரதேசங்களுக்கான உணவு விநியோகமும் போக்கு வரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. இது பட்டினி மூலம் தமிழ் மக்களை அடக்கி பணிய வைப்பதன் ஊடாக புலிகள் இயக்கத்தை பலமிழக்கச் செய்யும் ஒருவகைத் ராணுவத் தந்திரோபாயமாகும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான இன்றைய அரசாங்கம் வடக்கு கிழக்கைப் பிரிப்பதிலும் பஞ்சாயத்து முறை என்பதன் ஊடான ஒரு ஏமாற்றுத் தீர்வை முன்மொழிவதிலும் ஈடுபட்டு வருகின்றது. அத்துடன் புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத இயக்கம் எனக் கூறி அதனை ஒழிப்பதைத் தனது ராணுவ இலக்காகவும் கொண்டுள்ளது. கடந்த மாதப் பிற்கூறில் இந்தியப் பயணத்தை மேற்கொண்டிருந்த ஜனாதிபதியின் உரைகளும் நேர்காணல்களும் உயர்தலைவர்களுடனான சந்திப்புக்களும் அவரது பேரினவாத ராணுவ ஒடுக்கு முறைக்கான முனைப்புகளையே வெளிப்படுத்தியிருந்தன.

எனவே மூளப்போகும் பேரழிவு யுத்தத்தை தடுக்கும் உண்மையான சக்தி தெற்கின் சிங்கள மக்களிடம் மட்டுமே உண்டு. பேரழிவு யுத்தம் ஒன்றுக்கு ஜனாதிபதியின் நிலைப்பாடும் அரசாங்கத்தின் விட்டுக் கொடுக்காத போக்கும் அடிப்படையானதாக அமைந்துள்ளது. அதற்கு ஊக்கம் அளிப்பதில் பேரினவாத ராணுவயுத்தவாதிகளும் ஜே. வி. பி- ஹெல உறுமய சக்திகளும் முன்நிற்கின்றன.

எனவே யுத்தம் மூள்வதைத் தடுத்து நிறுத்த யுத்த எதிர்ப்பு சக்திகள் அணிதிரண்டு அரசியல் தீர்வையும் சமாதானத்தையும் வற்புறுத்தி மாபெரும் எதிர்ப்பியக்கத்தை முன்னெடுக்க வேண்டும். அதற்கான அடிப்படை சக்திகள் சிங்கள மக்களிடையே ஏற்கனவே இருந்து வருகின்றன. அத்தகைய சக்திகள் அணிதிரண்டு செயல்படுவதன் மூலம் அரசாங்கத்திற்கும் ஜனாதிபதிக்குமான பாரிய அரசியல் அழுத்தத்தைக் கொடுக்க முடியும். பேரினவாத யுத்த எதிர்ப்பையும் நியாயமான அரசியல் தீர்வையும் வற்புறுத்தி வந்த இடதுசாரி ஜனநாயக முற்போக்கு சக்திகள் சகல தடைகளையும் தாண்டி அரங்கிற்கு வர வேண்டும். அதுவே பேரழிவு மிக்க யுத்தம் ஒன்று முழு அளவில் மூள்வதைத் தடுத்து நிறுத்தக் கூடிய உடனடி வழிமுறையாகும்.

வெளியிடுபவர் : இ.தம்பையா, இல. 47, 3வது மாடி. கொழும்பு சென்றல் சுப்பர் மார்க்கட், கொழும்பு 11. அச்சுப்பதிப்பு: கொம்பிரின்ட், 334A,K.சிறில் சி.பெரேரா மாவத்தை. கொழும்பு 13.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்